# தெம்மாங்குத் தெய்வானை

நாடகம்

பூவை. எஸ். ஆறுமுகம்

வானதி பதிப்பகம்
தி.நகர் · சென்னை-17

முதற்பதிப்பு: டிசம்பர், 1969
திருநாவுக்கரசு தயாரிப்பு
விலை ரூ. 1—25

அச்சிட்டோர்:
உமாதேவி அச்சகம்,
140, வெங்கடாஜல முதலி தெரு.
சென்னை-14.

# முன்னுரை

ஒரு நாள்.

தை பிறப்பதற்குச் சில தினங்களே எஞ்சியிருந்த நேரம் அது.

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தேன். வெளிவர விருந்த படங்களின் பாடல்கள் சிலவற்றை வழக்கம் போலப் பாடிக் காட்டிக் கொண்டிருந்தார்.

அப்போது, 'தெம்மாங்குத் தெய்வானை' என்ற என்னுடைய ரேடியோ நாடகத்தைப்பற்றிய பேச்சை அவர் தொடங்கினார்; தான் அந்த நாடகத்தைக் கேட்டதாகவும், அதையே முழுநேர நாடகமாக ஆக்கித் தரும்படியும், தானே அதற்கு எல்லாப் பாடல்களையும் எழுதுவதாகவும் உற்சாகப்படுத்தினார். அவர் கொடுத்த அந்த உற்சாகத்தின் துணைகொண்டு, எனக்கே உரிய அந்தக் கிராமப் புறத்து மண்வாடை வீசும் வகையில், மிகவும் இயல்பானதோர் முறையில் இந்தத் 'தெங்மாங்குத் தெய்வானை'யை உருவாக்கினேன். நாடகத்தை முடித்து அவரிடம் படித்துக் காட்ட எண்ணிய நேரத்தில், அவர் கதையை முடித்துவிட்டான் காலன். கவிஞர் கல்யாணசுந்தரம் உயிருடன் இருந்திருந்தால், 'தெம்மாங்குத் தெய்வானை' திரைக்கும் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பாள்.

மதிப்பிற்குரிய பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள் இதை வானொலியில் முதலில் அரைமணி நேர நாடகமாக நடத்தினார். பின்னர் அதை விரிவு படுத்தினேன். மேடைக்கேற்ற நாடகம் இது; நாட்டுப்புறச் சூழலில் முழுக்க முழுக்க அமைக்கப்பட்டது; அதீத

உணர்வு நாடக வகைக்கு உட்பட்டது. தெய்வானையின் பாத்திரக் கட்டுக்கோப்பும் அவளது மனப்பக்குவமும் ஒரு புதிய கோணத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதாகவே நான் உணர்கிறேன். எனக்கு நிறைவு ஈந்த நாயகி அவள். அவளுடைய கண்ணீரோடு விதி விளையாடிய விசித்திரத்தை என்னால் மறக்கவே முடியாது.

'அரவிந்தம்' என்ற ஏட்டில் இதனை வெளியீட்டுப் பெருமை கொண்டார் அதன் ஆசிரியை.

இப்போது தெம்மாங்குத் தெய்வானை' நூல் வடிவம் பெறுகிறது. மேடைக்குகந்த நல்ல நாடகம் இது. விரும்புவோர் என் அனுமதி பெற்று நடத்தலாம். என் பெயரையும் தெய்வானையின் மனத்தையும் காக்கும் வகையில் நடத்த வேண்டும். இதன் மூலம் தமிழ் நாடக இலக்கியம் வளரவில்லையென்று 'ஒச்சம்' சொல்லிச் சோம்பித் திரியும் கும்பலின் மண்டையில் நன்கு அடிக்கவும் ஒரு வாய்ப்பு உங்களுக்குக் கிட்டும்!

இதனைச் சிறந்த முறையில் வெளியிடும் வானதி பதிப்பகத்தினருக்கு என் அன்பின் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் நான். ரசிகர்களின் தழைத்துச் செழித்த பேரார்வத்துக்குக் கைகூப்புகிறேன். கவிஞரின் நல்நினைவுக்கு இது நிவேதனம்.

பூவை. எஸ். ஆறுமுகம்.

# தெம்மாங்குத் தெய்வானை

## நாடக உறுப்பினர்கள்

| *ஆண்கள்* | *பெண்கள்* | |
|---|---|---|
| மாணிக்கம் | தெய்வானை | கோவிந்தம்மா |
| கந்தசாமி | வேலாயி | பவளக்கொடி |
| மாசிமலைத்தேவர் | அல்லி | |
| கோதண்டம் | பொன்னம்மா | |

## *காட்சி 1*

திரை விலகும்போது, அழகு நிலா புறப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே சமயத்தில், 'ஆத்தோரம் கொடிக்காலாம்; அரும்பரும்பாய் வெத்திலையாம்:' என்னும் தெம்மாங்குப் பாடல் ஆண் குரலில் எழுந்து காற்றில் மிதந்து வந்து ஒலி எழுப்பிக் கொண்டிருக்கிறது. தென்னந் தோப்பின் மத்தியில் அமைந்த வீட்டின் வெளிப் பக்கத்துத் தூணில் சாய்ந்தபடி கனவு நிலையில் நிற்கிருள் தெய்வானை.

அப்போது:

*[சிறு வயதிலே அவளும் அவளுடைய மச்சான் மாணிக்கமும் மணல் வீடுகட்டி விளையாடி மகிழ்ந்த காட்சி உரையாடல் வடிவில் விரிகின்றது.]*

**சிறுவன் மாணிக்கம்:** ஆமா, தெய்வானை! இந்த மணல் வீடு சாட்சியாச் சொல்றேன்; நான் ஒன்னையே

தான் கண்ணாலம் கட்டிக்குவேன்!... நம்ப குல தெய்வம் கட்டாயம் நம்பளோட ஆசைக்களைப் பலிக்க வைக்கும்!—ஆமா, அத்த மகளே!... என்னை நம்பு!... (அவன் அவளுக்குக் கையடித்துக் கொடுக்கிறான்.) நான் ஒனக்கேதான்!...நீ எனக்கேதான்!

சிறுமி தெய்வானை: மெய்யாலுமா, அத்தான்?—அப்படியானா நான் கொடுத்துவச்ச பொண்ணுதான்!

[தெய்வானை கனவுக்கோலம் கலைந்து கண்களைத் துடைத்துக்கொண்டு விழித்துப் பார்க்கிறாள். ஆசை மச்சான் சொன்ன உறுதி மொழி நினைவு வந்ததும், சிரிப்பும் சேர்ந்து வருகிறது.]

தெய்வானை: (கைகளை உயர்த்தித் தொழுது, தன்னை மறந்த லயந்தன்னில்) காளி ஆத்தா! எங்க ரெண்டு பேரையும் ஒண்ணுசேத்து வச்சிப்பிடு, தாயே! மேலைக்கு உன் சன்னதியிலே மாவிளக்கு செஞ்சு வைக்கிறேன்.

[அப்போது அவள் தந்தை மாசிமலைத்தேவர் வாசல் தட்டியை விலக்கியபடி உள்ளே நுழைகிறார்.]

தெய்: வாங்க அப்பா! களைச்சுக் களைதாங்கிப் போய் வந்திருக்கிறீங்களே?.. மூஞ்சியைக் கழுவிக்கினு சுருக்கா ஓடியாங்க; சுடுகஞ்சி காய்ச்சி வச்சிருக்கேன்! கூணிப்பொடி வறுத்திருக்கேன். பச்சைக் கொத்த மல்லித் தழையைத் துவையல் அரைச்சிருக்கேன். வெரசா வாங்க, அப்பா!

மாசிமலைத்தேவர்: தெய்வானை! கண்ணைக் காதை அடைச்சிட்டிருந்த இந்தக் கிழத்தோட பசி அப்பிட்டும் நூந்து போயிடுச்சும்மா!

தெய்: என்னங்க அப்பா இது? ஒரேமுட்டா அதிசயக் கூத்தாயில்ல இருக்கு ஒங்க பேச்சு?

மாசி: ஆமாம்மா! அந்தச் சேதி காதுக்குள்ளாற விளுந்துச்சு; மனசும் வயிறும் நெறஞ்சிடுச்சு! மெய் தான், தெய்வானை!

தெய்: அப்பா! ஒங்க பேச்சு விடுகதையாட்டம் இருக்குதுங்களே?

மாசி: அப்படியுந்தாம்மா இருக்கும். நம்ப தெய்வம் எங்கிட்டவே விடுகதை போட்டுப்பிடுமோ என்னமோன்னுதான் வயித்திலே நெருப்பைக் கட்டிக் கிட்டிருந்தேன்; நல்லவேளை, நெருப்பு குளுமையா டுச்சு; ஆத்தா விடுகதை ஏதும் போடலே. அதுக்குப் பதிலா, விடி பொளுதைக் காட்டியிருக்குது. ஒன்னோட பேர் ராசிக்கும் ஒன்னோட மச்சான் மாணிக்கம் பேர் ராசிக்கும் பேர் பொருத்தம் பார்த்தான் அரசர் குலம் வள்ளுவன்!—ஒலைக் குட்டானும் அதோட முடியும் கணக்கிலே பொருந்தியிருக்குதாம்!

[வாலைக் குமரியின் வதனத்திரையில் நாணம் ஓடிப் பிடித்து விளையாடுகிறது.]

தெய்: போங்கப்பா!

மாசி: நாளைக்கு கருக்கலோட போகப் போகிறேனே அம்மா!

[தலைமுடியை உதறித் தட்டி முடிந்து கொள்கிறார்.]

தெய்: எங்கேப்பா?

மாசி: குளமங்கலத்துக்கு! என் ஓடப் போறந்தா மவன் மாணிக்கத்துக் காதிலே இந்த நல்ல தாக்கலேப் போடவேணுமா?

[தெய்வானே வாய்விட்டுச் சிரிப்புக் காட்டுகிருள்.]

தெய்: மனசுபோல செய்யுங்க அப்பா!

[கன்றின் குரல் கேட்கிறது.]

மாசி: தெய்வானே, செவலேக் கன்னுக்குட்டிக்கு நாலு புல்லே உதறிப் போட்டுப்பிட்டு, கஞ்சியை வட்டியிலே ஊத்தி ஆறவை: இந்தாலே, நொடியிலே வந்திடுறேன்; அம்மா!

[தெய்வானே வீட்டினுள் நுழைகிருள்; முருங்கை மரத்தடியில் இருந்த தண்ணீச் சாலிலிருந்து நீர் அள்ளி முகம் கைகால் கழுவித் துடைத்தபடி வீட்டினுள் நுழைகிருர் தேவர்.]

## காட்சி 2

[அந்திப்பொழுது. தோட்டப் பகுதி. அருகே ஏற்றக் கிணறு இருக்கிறது. தீபாவளிப் புடவை திகழ, ஒரு கோடியில் நின்று பாடுகிருள் தெய்வானே ]

“ ஆத்தோரம் கொடிக்காலாம்!...
அரும்பரும் பாய் வெத்திலேயாம்!
போட்டாச் செவந்திடுச்சே, ஆசை அத்தானே!
பூரிச்சுப் போனீங்களா, நேசமச்சானே!...”

[மறுமுனையிலிருந்து தோன்றி எதிர் பாட்டுப் பாடுகிறுன் அழகே உருவான மாணிக்கம். பாட்டு முடிந்ததும், இருவரும் ஒருவரை யொருவர் தேடிவரும் சமயம், ஒருவர்மீது ஒருவர் இடித்துக் கொள்கின்றனர்.]

தெய்வானை: (முதலில் நாணம் காட்டி, பின் பொய்க் கோபம் காட்டி) கண்ணுலே நல்லா முழிச்சுப் பார்த்து வரப்பிடாதா, மச்சான்?

மாணிக்கம்: (அவளைக் கேலிசெய்தபடி) தெய்வானை, நீ சொல்ருப்பிலே பார்த்துக்கிட்டு வந்ததாலேதான் வந்தது இந்த ஆபத்து!...(பொய்க் கோபத்துடன்)...ம்... நான் கிணத்துக்குப் போறேன்!

தெய்: (புறப்பட்டவனைக் கரம் பற்றி இழுத்து நிறுத்துகிருள்) மச்சான்!...மச்சான்!...

மாணி: கிணத்துக்குப் போறேன்னதும், என்னமோ ஏதோன்னுதானே பயந்து போயிட்டே, தெய்வானே?... சபாசு!...அப்பன்னு, என் பொய்க் கோவம்தான் கெலிச் சுது!...சரி, கிணத்தடிக்குப் போனதும், என்ன செய் வேன் தெரியுமா?... என்னுடை நெஞ்சிலே இருக்கிற தெய்வானைப் பெண்ணைக் கூப்பிடுவேன். அவ ஓட்டமா ஓடி வருவா, வெள்ளி நிலாவிலே நாங்க ரெண்டு பேரும் ஒட்டியிருந்து பேசிப் பாடிக்கிட்டே இருப்போம்!......

தெய்: அப்ப, நானு...? (கண்களைக் கசக்குகிருள்).

மாணி: அத்தை மகளே, தெய்வானை! முதலிலே நீ வாய்விட்டுச் சிரி; அப்பத்தான் எனக்கு நல்ல மூச்சு வரும்!

[தெய்வானை சிரிக்கிருள்]

தெய்: இப்ப சொல்லுங்க!

மாணி: நீ என் பக்கத்தில் இருக்கிறதின்னு, அந்தத் தெய்வானைப் பொண்ணைக் கூப்பிடலை. நீ இல்லாத நேரத்திலே, எனக்குப் பொளுது போறதுக்குப் பேச்சுத் துணைக்கு அப்பாலே அழைச்சுக்கிடுறேன்!...தெய்வானை, நான் எம்பிட்டு அதிஷ்டக்காரன் தெரியுமா?...ஒரு தெய்வானை நேரிலே பேசவும், இன்னொரு தெய்வானை நெனைவிலே பேசவும் கிடைக்கிறது எம்மாம் அதிசயம்...?

தெய்: (பெருமூச்சுடன்) ம்!...ரெண்டு அவதாரம் எடுக்கற தெய்வமா ஆக்கிப்பிட்டீங்களே என்னை?

மாணி: பின்னே என்னவாம்?...நீதானே என் தெய்வம்?...

தெய்: ஊஹூம், நீங்கதான் என்னோட தெய்வம்!...

மாணி: அம்மாடி, நான் தெய்வமா மாற மாட்டேன். அப்புறம் நீ வரம் கேக்க ஆரம்பிச்சிருவே?

தெய்: நீங்கதான் அஞ்சு வயசிலே அறியாப் பருவத்திலே எனக்கு வரம் தந்து தெய்வமாயிட்டீங்களே, மச்சான்!...அடடே, மறந்துட்டேனே!...அத்தான், உங்க வாயைத் திறங்களேன்!...

மாணி: என் வாயிலே மண்ணைப் போட்டுப்பிட்டு ஈரேழு உலகத்தையும் காட்டச் சொல்லப் போறியா? அய்யய்ய!...நான் மாயக்கண்ணன் இல்லியே!

தெய்: நையாண்டி பண்ணாதீங்க, மச்சான்!...இந்தாப் பாருங்க, இந்தச் சீனியை உங்க வாயிலே கொட்டி என்னோட கடவுளைக் கும்பிடப் போறேனாக்கும்!

[மடியிலிருந்து சீனிப் பொட்டலத்தைப் பிரித்து அவன் வாயில் கொட்டுகிறாள்]

மாணி: (இனிப்பை ரசித்தபடி) இந்தச் சீனியைவிட எனக்கு என்னோட தெய்வயானைப் பொண்ணுதான் ரொம்ப ரொம்ப இனிக்கும்!...

ய்: (கரம்பற்ற வந்தவனிடமிருந்து விலகி) அத்தான்! அந்த நாளையிலே மணல் வீட்டைச் சாட்சி வச்சு எனக்குக் கையடிச்சுத் தந்தீங்களே, அந்த வாக்கு பலிச்சிட்டுது!...அதுக்குத்தான் உங்க வாய்க்கு சீனி போட்டேன்!...மச்சான், இனி நீங்க தாலியும் கையுமா வந்தாத் தான் என் கையைப்பிடிக்கமுடியும்!...ஆமா!...சொல்லிப்பிட்டேன்! அப்பத்தான், இந்தப் பூவத்தகுடி, நம்ப ரெண்டு பேரையும் நல்ல கண்ணாலே பார்க்க ஏலும்!

[தெய்வானையும் மாணிக்கமும் சிரிக்கிறார்கள். அச்சமயம், மாசிமலைத்தேவர் வயல்வெளியிலிருந்து திரும்பி இக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தபடி பின்வாங்கிச் செல்கிறார்.)

மாணிக்: தெய்வானை! உங்க அப்பாரு வெள்ளனவே வந்து நல்ல சேதி சொன்னாங்க, நான் கொடுத்து வச்சவன்!...நான் இப்ப போயிட்டு, அடுத்த கிழமை நம்ப கண்ணாலத்துக்குப் பரிசம்போட மாப்பிள்ளைக் கோலத்தோட வந்து சேர்றேன்! எல்லாம் இந்தக் கார்த்திகைக்குள்ளாற முடிஞ்சிடணும். நான் போயிட்டு வாரேன், தெய்வானை.

[நாணம் பூத்து, அவன் செல்வதையே அவள் இமைக்காது பார்த்தபடி நிற்கிறாள் ]

## காட்சி 3

[காலைப் பொழுது, வீதியில் 'ஸ்கிப்பிங்' கயிற்றைச் சுற்றியவாறு சிறுமி அல்லி வந்து கொண்டிருக்கிறாள்.]

கோதண்டம்: (தவளைப் படம் போட்ட நவநாகரிக உடை, 'கூலிங்கிளாஸ்' காமிரா சகிதம் கையில் பெட்டி

யுடன் மணியக்காரர் மகன் விரைந்து வந்து) ஹல்லோ அல்லி—

அல்லி : (திரும்பி) யாரது?

கோதண்: நான்தான்......நானேதான்... என்னைத் தெரியவில்லையா?

அல்லி: (குனிந்து முகத்தைக் காட்டும் கோதண்டத்தை மேலும் கீழும் பார்த்துவிட்டு,) ஊஹூம்!

கோதண் : (மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கையில் சுழற்றிக் கொண்டே) இப்போது பார்!

அல்லி : (கைகளைத் தட்டி) அடடே, நம்ப கோதண்டம் அண்ணாச்சி, உங்க கறுப்பு மூக்குக் கண்ணாடி என்னையே ஏமாத்திடுச்சே?

கோதண்: அதனால்தான் பட்டணத்திலே உன்னைப் போன்ற சின்னஞ்சிறு குழந்தைகள்கூட மூக்கும் கண்ணாடியுமாக கோலாகலமாக காட்சியளிக்கிறார்கள்!

அல்லி : பள்ளிக்கூடத்திலே வாத்தியார் ஐயா தமிழ்ப் பாடம் சொல்லித் தர்றதைக் கேட்கிற மாதிரி இருக்கு உங்க பேச்சு.

கோதண் : போச்சு!...போச்சு! அவ்வளவு மோசமாகவா கடபுடான்னு இருக்கு என் தமிழ்ப் பேச்சு!...

அல்லி ; இல்லே; அத்தனை அழகாயிருக்கு!

கோதண் : பேஷ்! பேஷ்!! என்னைப் புரிஞ்சுக்கிட்ட உனக்கு ஒரு பரிசு தரப் போகிறேன், பாரேன்! (பெட்டியைத் திறந்து பொட்டலம் ஒன்றை உடைத்து நீட்டுகிறான்.)

அல்லி : அதுக்கு என்ன பேரு?

கோதண் : பாப்கார்ன்!

அல்லி : அம்மாடியோ! என் வாயிலே அந்தப்பேரு நுழையாது!

கோதண் : பெயர் இருக்கட்டும். முதல்லே இதை வாயில் போட்டுப் பார்!

அல்லி : (வாயில் போட்டுக்கொண்டே) இதுக்கு பேர் என்ன தெரியுமா, அண்ணச்சி?

கோதண் : சொல்லு தங்கச்சி!

அல்லி : சோளம்!

கோதண் : ஐயோ! நம்ம ஊரிலே காலிலே எத்தி மிதிச்சுக்கிட்டுப் போற சோளத்துக்கா இந்தப் புதுப் பேர் சூட்டி இந்த கோதண்டத்துக்கு அஞ்சு ரூபாய் தண்டம் வச்சிட்டான் பட்டணத்திலே!

அல்லி : அண்ணச்சி, நீங்க நிக்கிறது பட்டிக்காட்டு மண். நீங்க உங்க பேச்சை மாத்திக்கிட்டாப்பிலே, உங்க வேஷத்தையும் மாத்திடுங்க! இந்தாங்க சோளக் கொட்டை!... நீங்களே வச்சுக்கிடுங்க!...

கோதண் : நில்லு!... ஆமா, பர்மாவிலேயிருந்து லெட்டர் வந்துகிட்டிருக்கில்லே!

அல்லி : ஓ! லெட்டரும் வருது!... அப்பாவும் வர்ருங்க! கூட கந்தசாமி அண்ணச்சியும் வருது!... எல்லோரும் அடுத்த மாசம் வந்திடுவாங்க!... (பேசிக் கொண்டே வந்தபோது, அல்லி அவனுடைய சட்டையை உன்னிப்பாகக் கவனித்துவிட்டு)... அண்ணச்சியோ!... உங்களைக் கொத்திட்டுப் போக கழுகு பறந்து வருது ஓடுங்க!

கோதண் : என்ன, என்னைக் கொத்திக்கினுப் போக கழுகு பறந்து வருறதுக்கு நான் என்ன தவளையா?

அல்லி : ஆமா, நீங்க தவளையேதான்!

[சுற்றுமுற்றும் பார்க்கிறான்; மேலும் கீழும் பார்க்கிறான்.]

கோதண்டம் : ஆ!

அல்லி : கோ. தண்டம் அண்ணாச்சி! ஆமா... போங்க! இங்கேயே ஒங்க மூளையைச் செலவழிச்சிட்டா, அப்புறம் பாக்கி லீவுப் பொழுதுக்கு எங்கே போவீங் களாம், மூளைக்கு? (சட்டையைச் சுட்டி) குனிஞ்சுப் பாருங்க... இந்தத் துணியிலேயிருக்கிற தவளையை குறி வச்சு ஆலாப்பறக்குது கழுகு!... தவளையைக் கொத்த வந்த வேகத்திலே உங்க தலையை கொத்திடப் போகுது! ம்... வெரசா ஓடுங்க!

கோதண் : (கைகளை அசைத்தபடி) டை!...டை!... (கோதண்டம் ஓடுகிறான்; எருமைச்சத்தம் அதே தருணத்தில் ஒலி எழும்புகிறது.)

அல்லி : வீட்டிலே போய்ப் பையைத் தேடுங்க! ம்! ஓடுங்க, கோதண்டம் அண்ணாச்சி! நான் எங்க வீட்டுக்கு போறேன்! (ஸ்கிப்பிங், கயிற்றைச் சுற்றியவாறு சிறுமி அல்லி செல்கிறாள்.)

## காட்சி 4

[மாசிமலைத்தேவன் மரப்பெட்டி ஒன்றைப் பிரித்துக் கொண்டிருக்கிறான். சுற்றிலும் சில கணக்குக் குறிப்பு பேரேடுகள் சிதறிக் கிடக் கின்றன.]

தெய்வானை : அப்பா!...பசிக்குதாப்பா ஒங்களுக்கு!

மாசிமலைத்தேவன் : காலைக் கஞ்சி குடிச்சு இன்னும் ஒரு நாழிகைப் பொழுதுகூட ஆகலையே அம்மா!... சுண்டல் குழம்பும் கருகப்பிலைத் துவையலும் வயத்திலே நெறஞ்சிருக்குதே!... அதுக்குள்ளார எப்படித் தெய்வானை பசிக்கும்?

தெய்: அதுக்கில்லேப்பா!... என்னென்னமோ பழங் கணக்கையெல்லாம் கிண்டிக் கிளறிக்கிட்டிருக்கீ களே, அதாலே சும்மா பேச்சுக்கு ஒரு வார்த்தை கேட் டேன்! (சிரிக்கிருள்.)

மாசி : (கடகடவென்று வாய் வெற்றிலையுடன் சிரித்தபடி.) என் ராசாத்தியோட குறும்புப் பேச் சைக் கேட்டுக்கிட்டே இருந்தாக்கூட பசி தெரியாதே!... கண்ணு செவலை மாடு ரெண்டும் கருக்கல்லேருந்து போரடியிலே நின்னுது; களைச்சுக் களைதாங்கியிருக்கும். இன்னொரு வாட்டி, உண்டன புண்ணுக்கு ஒடைச்சிப் போட்டு, ஒரு கை தவிடையும் கொட்டி தண்ணி காட்டம்மா.

தெய் : நீங்க சொல்லுவீங்கன்னு எனக்கு சோசியம் தெரிஞ்சுது, அப்படியே செஞ்சிட்டேன்.

மாசி : (நகைத்துக் கொண்டே) காலம்பற செதுக் கியாந்த புல்லை உதறி வெள்ளைக் கன்னுக்குட்டிக்குப் போட்டாச்சினு சொல்லு!

தெய் : ஓ!

மாசி : சரி, இப்பிடி வந்து குந்தம்மா!

தெய் : (வந்தமர்கிருள்.) சோறு அடுப்பிலே வேகுது. களத்து மேட்டிலே அலுவல் பார்க்கிறவங்க பறப்பாங் களே!

மாசி : மெய்தான்! உங்கிட்டே கமுக்கமா ஒரு தாக்கல் விசாரிக்கணும் கண்ணு!

தெய் : என்னங்கப்பா?

மாசி : ஆமா, உன் மச்சான் வந்து பரிசம் போடறதுக்கு இன்னும் எண்ணி அஞ்சே அஞ்சு நாள்தான் மிஞ்சியிருக்கு! மாப்பிள்ளை பரிசப்பணம் எவ்வளவு கொடுப்பாரும்மா?

தெய் : லட்ச ருவா தருவாங்க, லட்ச ருவா!

மாசி : (திகைத்து) மெய்யாவா?

தெய் : உங்க மக பொய் பேசுமாப்பா?...மச்சான் பேரு என்ன சொல்லுங்க!

மாசி : நீதான் சொல்லேன்!

தெய் : ஊஹூம், நான் சொல்லப்புடாது!

மாசி : பேரு மாணிக்கம்!

தெய் : அது விலை மதிக்க முடியாததாமே!

மாசி : நெசந்தான்!

தெய் ; அப்படிப்பட்ட ஆம்பளை எம்பேரிலே தன் உசிரை வச்சிருக்காகளே, அதுக்கு லட்ச ருவா மட்டுந்தானா மதிப்பு?... கோடி ருவா கொடுக்கோணுமே அப்பா?

மாசி : உண்மைதான் தெய்வானை, கோடி ருபாய்க்கு பதிலாகத்தான் என்னோட குலச்சுடரான ஒன்னையே அவங்க கையிலே ஒப்படைச்சுக் கொடுக்கப் போறேனே!...பரிசத்துக்கு சேலை துணிமணி, சம்பந்தி

விருந்துக்கு சாமான் எல்லாம் வாங்கறதுக்கு நாளைக்கு அறந்தாங்கி செவ்வாச்சந்தைக்கு மாப்பிள்ளை போறுங்க; நானும் கூடப் போறேன்! பாவம், அவுகளுக்கு என்னைத் தவிர யாரு நாதி?...என்னமோ, என் அக்காளுக்கும் அத்தானுக்கும் கொடுத்த சொல்லை காப்பாத்திட்டேன்.... ம்!...உங்கம்மா உசிரோட இந்நேரம் இருந்திருந்தா, எம்பிட்டோ பூரிச்சுப் போயிடுவா!

தெய் : அம்மா, அத்தை, மாமன் அல்லாரும் எங்க கண்ணுலத்துக்கு வந்து அட்சதை போட்டு வாழ்த்து வாங்க அப்பா!

மாசி : கட்டாயம் ஆசீர்வாதம் பண்ணுவாங்க!—செத்துத் தெய்வமானவங்களாச்சே!. .கார்த்திகை கடைசிக்குள்ளாற பரிசம் போட்டு முடிஞ்சுதாறு, அப்பாலே மார்கழி மாசம் நடுவிலே இருக்குது. தை மாசத் தொடக்கத்திலேயே முகூர்த்தத்துக்கு தேதி வச்சுப்புடணும்!

தெய் : கண்ணுலச் செலவுக்குப் பணம் காசு தயார் பண்ணிப்பிட்டீங்களா அப்பா?

மாசி : இந்தப் போகத்திலே விளைஞ்ச குறுவையை அப்படியே புதுக்கோட்டைச் சந்தையிலே வித்திடணும்; கடலை பிடுங்கினதும், அதிலே கொஞ்சம் தேறும்; கஞ்சித் தண்ணிக்கு சம்பான்தாக்கை மட்டும் கைகாவலுக்கு வச்சிக்கிட்டு, சொச்சம் இருக்கிற ஆதி பிரமர் துண்டையும் விலை பேசி வித்திடப்போறேன். எல்லாம் சேர்ந்து ஆயிரம் ரூவா கைக்கு கெடைக்கும். கொட்டு முழக்கோட, பொய்க்கால் குருதை காந்த விளக்கோட, பருப்பு பாயசத்தோட தடபுடலா உங்கண்ணுலத்தை நடத்திப் புடுவேன். ராசாத்தி!...ம்! கார்த்திகை கடைசித் தேதிகூட கண்ணுலத் தேதிதானும்! அன்னிக்கே பரிசம் போட்டுப் பிடலாம்னு மாப்பிள்ளே சொன்னுக!

[தெய்வானை உணர்ச்சிப் பெருக்குடன் மெய்ம் மறந்திருக்கின்றுள்.]

## காட்சி 5

வேலன் வேலாயி தம்பதிகள் வீடு

[வேலாயி அரிசி புடைத்துக்கொண்டிருக்கிருள். இன்னொரு பக்கத்தில் குழந்தையை வைத்துக்கொண்டிருக்கிருன் வேலன். குழந்தை கத்தத் தொடங்குகிறது.]

வேலன் : காணுத கோயிலுக்கெல்லாம் காணிக்கை செலுத்தி நான் பெத்த புள்ளை அழுகுது. ஓடியாலே பொண்ணு!

வேலாயி : ஆத்தாடியோ! மூச்சுப் பறியற நேரத்துக்குள்ளே முழுப் பூசணிக்காயையே சோத்திலே மறைச்சிட்டீங்களே, மச்சான்?—

வேலன் : என்ன வேலாயி—புதிர் போடறே?

வேலாயி : நான புதிர் போடறேன்!—சரி, சரி!—நான் பெத்த மகனை இங்கிட்டாலே கொண்டாங்க!. .

வேலன் ; ஓஹோ!—புரியுது! புரியுது! இந்தா தாயே நீ பெத்த பிள்ளை!

[வேலாயி குழந்தையை வாங்கி 'நீலவண்ணக் கண்ணு வாடா!' என்ற பாடலின் சில வரிகளைப் பாடுகிருள்.]

வேலன் : வேலாயி, ஒனககுக் கோடிப் புண்ணியம் கெடைக்கும்; அதுக்கு மேற்கொண்டு நீ பாடாதே!—

சினிமாவிலே பாட்டு எழுதினவங்களும் பாட்டு பாடின வங்களும் சண்டைக்கு வரப்போருங்க!

வேலாயி : ஏன் மச்சான்! பாட்டு நல்லாயில்லே!

வேலன் : பாட்டு ஷோக்காயிருக்கு; ஒன் குரல்தான் நல்லாயில்லே—அது தொலையட்டும்! நான் ஒனக்கு ஒரு ரகசி

வேலாயி: நான் ஒரு ரகசியத்தைச் சொல்லட்டுமா?

[அப்போது 'சொல்லட்டுமா — சொல்லட்டுமா? ரகசியத்தைச் சொல்லட்டுமா?'—என்ற சினி மாப் பாடல் காற்றில் மிதந்து வருகிறது.]

வேலன் : வேலாயி! காளி ஆத்தா ஒரு பெரிய தப்பு செஞ்சிட்டது. ஒன்னை அந்தக் காலத்து கம்பர் ஊட்டிலே புடிச்சுப் போட்டிருந்தாலாவது, கட்டுத்தறிக்குப் பதிலா நீயாவது பாடிக்கிட்டிருக்கலாம்!

வேலாயி : மச்சான் மச்சான்! ஒங்களுக்கு எவ்வளவு கெட்ட எண்ணம்? நான் கம்பர் வீட்டிலே பிறந்திருந்தா அம்பிகாபதிக்கு சிரச்சேதம் கிடைச்ச மாதிரி எனக்கும் கிடைச்சிருக்குமே!

வேலன் : அடடா! நம்ப ஊரிலே பயாஸ்கோப் கொட்டகை வந்ததிலேலே உண்டான அனர்த்தம் இது! ஆமா ஒனக்கு சேதி தெரியுமா? இரு, இரு! சிட்டுக்குருவீ சிட்டுக் குருவி! சேதி தெரியுமான்னு பாடிப்பிடாதே!

வேலாயி : ஹி—ஹி—! சொல்லு மச்சான்!

வேலன் : என்னோடெ சேக்காளிக்கு கண்ணாலம் நடக்கப் போவுதாக்கும்!

வேலாயி : அப்பிடியா?—என் கூட்டாளிப் பொண்ணுக்கும்தான் வார வெள்ளிக்கிழமை பரிசம் போடப் போறுங்க!

வேலன் : யாருக்குப் பரிசம்...!

வேலாயி : எங்க தெய்வானைக்கு! ஆமா, நீங்க சொன்ன கண்ணாலம் யாருக்காம்?—

வேலன் : எங்க 'ராஜபார்ட்' மாணிக்கத்துக்கு!...

வேலாயி : அவுங்க ரெண்டு பேருக்கும் கண்ணாலம் நடக்கப்போறது ஒங்க காதுக்கும் எட்டிப்பிடுச்சா?—இந்த மாதிரி துப்பு கண்டுபிடிக்கறது எங்களாலேதான் சாத்தியமின்னு நெனைச்சிருந்தேன்?...

வேலன் : மனசை அலட்டிக்கிடாதே பொண்ணே! நம்ப மணியக்காரரு மகன் கோதண்டம் ஐயா ஒரு அதிசயத்தைச் சொன்னாரு, பட்டணத்திலே நாய்தான் துப்பு துலக்குதாம்!... நீ போனீன்னா, அதுகளுக்கு லீவு கெடைக்கும்!

வேலாயி: (பொய் அழுகையுடன்) என்னை நாயின்னு சொல்லிட்டீங்க?...

வேலன் : நீ ஏன் அழுகணும்?..நான் இல்லே உன்னைக் கட்டிகிட்டதுக்கு அழுகவேணும்? (பொய் அழுகை)

வேலாயி : (கைதொட்டு)...அழாதீங்க, மச்சான்! அப்பாலே நம்ப ராசாவும் அழுதிடப்போவுது! ஆமா உங்க மாணிக்கம் கூத்து நடத்தப் போகுதாமே?

**வேலன் :** ஆமா, ஆமா!...மணியக்கார ஐயா செட்டித் தெரு பிள்ளையாருக்குச் சந்தனக்காப்புச் சாத்தப் போருங்களாம்! அதுக்காக நாடகம் போடணும்னு பிரியப் பட்டாராம்!

**வேலாயி :** ப்! எங்க தெய்வானை கொடுத்து வச்ச பொண்ணு! ராசபார்ட்காரரே புருசனுக் கெடைக்கப் போருங்க!. .நல்ல வேளை, நம்ப கண்ணுலத்துக்கு குறுக்கே நின்னு தடுக்க ஒரு பாவிப்பயல் வந்து குதிச்ச மாதிரி இவங்க கண்ணுலத்திலே எதவும் நடக்காது! (பேசி முடிந்ததும், அவன் தும்முகிருன்.)

## காட்சி 6

**தெய்வானை வீடு.**

[தெய்வானை வீட்டுக் கூடத்தில் சம்மணமிட்டு உட்கார்ந்து 'புலந்திரன் களவுமாலை' படித்துக்கொண்டிருக்கிருள் ராகம் நீட்டி]

"போரஞ்சா வீரனவர் புலந்திரனும் கூறலுற்ருன்!
காரிழையின் மாது கலந்தாரி நாயகியே!
உன்னை மாலையிட்டுக் கொண்ட மணவாளன்
யான் காணும்!
தாலிதரித்த தொரு தர்மர் மகன் யான் காணும்!
கொணடு சிறையில் வைத்த கொற்றவனும்
யான் காணும்!
மதுரையை விட்டு வந்தேன். மங்கையரே
யிப்போது! ..

[கதவு தட்டித் திறக்கப்படும் ஓசையைத் தொடர்ந்து, பழையகாலத்து இளவரசு

போன்ற உடை, கிரீடம், மீசையுடன் கத்தியும் தாங்கி வந்து ஓர் உருவம் நிற்கிறது.]

தெய் : (மலைப்புடன்) யாரு நீங்க? ..எங்கேயிருந்து வந்தீங்க? எதுக்காக வந்தீங்க?

ராஜ உருவம் : பொட்டுப் பொழுதுக்கு முந்தி நீ பாட்டுப்படிச்சியே, அந்த புலந்திரன் இளவரசு நானே தான்! வாசலிலே என் ரதம் காத்துக்கிட்டிருக்குது; என்னுடைய கலந்தாரியைச் சிறையெடுத்திட்டுப் போறதுக்கு வந்திருக்கேன்!

தெய் : ஓ அப்படீங்களா! வாங்க; திரும்பவும் சிறை எடுத்திட்டு மதுரைக்குப் போங்க! ஹாய்!

மாணி : (கிரீடம், மீசை, ராஜ உடை முதலியவற்றைக் கழற்றி விட்டு) தெய்வானை, நீ என்னை எப்படி அவ்வளவு சுளுவிலே அடையாளம் புரிஞ்சிக்கிட்டே?

தெய் : உங்க உள்ளத்தையே உள்ளபடி புரிஞ்சிக்கிட்ட எனக்கு உங்க உருவத்தைத் தெரிஞ்சுக்கிட ஏலாதா அத்தான்? நீங்க கூத்து நடத்த போற சங்கதி காதுக்கு எட்டிச்சு!...ம்! மூணும் வருசம் நீங்க ராவணன் வேசத்தோட வந்து என்னை ஏச்சதை நான் மறப்பேனா, மச்சான்?

மாணி : நான் உங்கிட்டே கெலிச்சுப்பிடலாம்னு வந்தேன்; ஆனா தோத்துப்போயிட்டேன்!

தெய் : நான் செயிச்சா அது நீங்க செயிச்சது போலேதானுங்களே?

மாணி: ஆமா, ஆமா, நாளைக்கு என் வீட்டுக்கு வரப் போற பொண்சாதிகிட்டே இந்த ராஜபார்ட் மாணிக்கம்

தோத்துப்பிடலாமா?...தெய்வானை, நாள் முச்சூடும் ஒன்னைப் பேசச் சொல்லி கேட்டுக்கிட்டே இருக்கணும்னு மனசிலே ஓடுது! ..

தெய்: மணவறையிலே நாம்ப உட்கார்ந்து எழுந்திருச்சதிலேருந்து நான் பேசிக்கிட்டே இருக்கேன்! நீங்க கேட்டுக்கிட்டே இருங்க!

மாணி: (சிரித்துக்கொண்டே அவள் நெற்றியில் அவன் கை வைக்க எத்தனிக்கையில் அவள் விலகுகிருள்.)...எட்டி எட்டிப் போறியே, அத்தை மகளே!

தெய்: நீங்க மூணு முடிச்சுப் போட்டானதுந்தான், நான் ஒட்டி ஒட்டி வருவேன்! . அதுதானே கிராமத்துப் பொண்களோட தனி மதிப்பு...

மாணி: போடு சக்கை!...நான் உன்னைப் பார்க்க வர்றப்போ பூனைகீனை குறுக்கே விழுந்து ஓடியிருக்கோணும்! அதான் ஒவ்வொரு பேச்சுக்கும் 'என்னை மடக்கிடுறே!...அது போகட்டும்!...தெய்வானை, ஒனக்கு பரிசத் துணிமணி எல்லாம் வாங்கியாந்திருக்கேனே, அதையெல்லாம் நீ பார்க்க எங்க வீட்டுக்கு ஒரு தரம் வா!. . காஞ்சிவரம் பட்டும் சரிகை ரவிக்கைத் துணியும் வாங்கியாந்திருக்கேன்.

தெய்: உங்க சாயாக் கடையிலே கல்லாவிலே நீங்க இல்லாட்டி வகைப்படுமா? போங்க மச்சான்! மேச்சலிலேருந்து மாடு திரும்புற பொழுதிலே நான் ஓடியாறேன்!...நாளை கூத்து முடிஞ்சதும், காவடி ஆட்டம் கூட நடக்கப்போகுதாமே! ..மணியக்காரர் போடுற கேசு அல்லாம் வெற்றி அடைஞ்சுகிட்டே இருந்தா; சாமியாடும் கொண்டாட்டந்தான் போலேருக்கு.

மாணி: நான் போரேன், தெய்வானை!

தெய்: போயிட்டு வாரேன்னு வாய் நெறஞ்சாப் பிலே சொல்லுங்க!

மாணி: உத்தரவு அம்மணி! போயிட்டு வாரேன்!

தெய்: போயிட்டு மகராசரா திரும்பி வாங்க!

மாணி: (புறப்பட்டவன் திரும்பி வந்து) இதோ வந்திட்டேன், மகாராணி!

தெய் ... ன்னுங்க இது?

மாணி: நீ தானே திரும்பி வரச் சொன்னே?

தெய்: (சிரித்தபடி) நெசமாவே நீங்க இப்ப கெலிச்சிட்டீங்க! சரி, போய் வாங்க! (கையை உயர்த்தி வழி அனுப்புகிருள்.)

மாணி: இதென்ன புது வழியனுப்புதலா இருக்கு?

தெய்: பட்டணத்துப் பக்கம் இப்படித்தான் செய்வாங்களாம். மணியக்கார ஐயாவோட பட்டத்தரசு கிட்டேயிருந்து 'எங்க சீமோட்டு வீட்டுக் கங்காணி மாமன் மக அல்லிக்குட்டி தெரிஞ்சு வந்திருக்கு.

[மாணிக்கம் அம்மாதிரியே கையை உயர்த்திச் சிரிக்கிருன்.]

மாணி: நாளைக்கழிச்சு பரிசம் போட வந்திடுவேன், தெய்வானை!

தெய்: (நாணத்துடன்) போங்க மச்சான்

[மாணிக்கம் உடனே ; புறப்பட்டுப் போய் விடுகிருன்; தெய்வானை சிரித்தபடி நிற்கிருள்.]

## காட்சி 7

[தெய்வானை படுக்கையில் படுத்திருக்கிருள். பூரணமான நிலவு காய்கிறது. தன் ஆசை மச்சான் மாணிக்கத்தைக் கனவில் கண்டு ஆடிப் பாடித் திளைத்து மகிழ்கின்ருள். தெம்மாங்குப் பாடலின் ஒலி மெல்லப் படர்ந்து வருகின்றது]

## காட்சி 8

[காலை மாசிமலைத்தேவர் நீண்ட வேப்பங் குச்சியைக்கொண்டு பல் துலக்கிக் கொண்டிருக் கிருர். அப்போது ஏதோ அரவம் கேட்கவே, 'ட்ரியோ, ட்ரியோ' என்று சொல்லி கீழே கிடந்த கம்பை எடுத்து வீசுகிருர். வீசப்பட்ட கம்பைப் பற்றிய வண்ணம், பட்டணத்து நாக ரீக இளைஞன் மணியக்காரர் திருக்குமாரன் கோதண்டம் வந்து நிற்கிருன்.]

கோதண்: ஹல்லோ! குட்மார்னிங்! குட்மார்னிங்!

மாசி: யாரது, புதுக் குரலாயிருக்கே?

கோதண்: புதுக்குரல் கிடையாது, புதுப்பாஷை, மிஸ்டர் மாசிமலைத்தேவர்!

மாசி: (மடியிலிருந்து மூக்குக் கண்ணுடியை எடுத்துப் போட்டுக்கொண்டு) ஓ...கோணல் எழுத்துத் தம்பியா?

கோதண்: (கிராப் தலையைக் காட்டி) இல்லிங்க நேர் எழுத்துத் தம்பி!

மாசி: (எச்சிலை உமிழ்ந்து விட்டு) தம்பிக்கு டீவு விட்டாச்சோ?

கோதண்: ஆமா; டீவு விட்டாச்சு ஐயா இப்ப டாவு அடிக்கிருரு!

மாசி: என்ன தம்பி, கிழவன் கிட்டே புரியற தமிழிலே பேசப்புடாதோ?

கோதண்: டீட்சை எழுதி ஓய்வுக்கு ஊருக்கு வந்திருக்கேன், தேவரய்யா!

மாசி: பரீச்சையெல்லாம் பாசாச்சா?

கோதண்: இன்னம் நாலு தேரோட்டம் கழிச்சாத்தான் பாசாகும்?

மாசி: ஏனும்?

கோதண்: நான் படிச்சுக்கிட்டிருக்கிறது, எஸ்.எஸ் எல்.சி.இங்கிற நாலெழுத்துப் பெரிய படிப்பாச்சுங்களே? நாலு வருடம் வேண்டாமா?

மாசி: மெய்தான், தம்பி!

[தெய்வானை தண்ணீர்க் குடத்துடன் நுழைகிருள்.]

கோதண்: யார், மிஸஸ் மாணிக்கமா?

மாசி: என்ன, தம்பிக்கு வெள்ளெழுத்தா.........இது தான் எம் மவ தெய்வானை!

கோதண்: (மெல்ல தனக்குள்) ஓ, மைலார்ட்!...பட்டிக் காட்டுக்கு வந்தும் பட்டணத்து வாசனை மறக்கமாட்டேங்குதே!..(உரத்த குரலில்) ஆமா, ஆமா.....தெய்வானை தான்! தெம்மாங்கு பாட்டை ட்யூன் பண்ணுமப்பாடுமே! தங்கச்சி கல்யாணத்துக்கு பட்டணத்திலேயிருந்து ஆகாயக் கப்பலிலே வந்து இறங்கிடுவேன்!

[தெய்வானை நாணியவாறு உள்ளே சென்று விடுகிருள்.]

மாசி: தம்பி, நின்னுக்கிட்டேயிருக்கீங்களே!

கோதண்: [கைக்கடிகாரத்தைப் பார்த்து] மணி ஒன்பதாகப் போகுதே! அப்படியாளு, அம்மா பெட் காப்பி தயார்ப் பண்ணியிருப்பாங்க! நான் போய்வாரேன்!

[கைகளை உயர்த்தி விடைபெற்றுச் செல்லும் போது, வழியில் சிறுமி அல்லி கையில் குவளையுடன் எதிர்ப்படுகிருள்!]

அல்லி: குட்மார்னிங், அண்ணு!

கோதண்: குட்மார்னிங் ஸிஸ்டர். ஆமா, கையிலே என்ன? தாங்க்யூ! சிக்கிரம் கொடு, குடிச்சாத்தான் எனக்கு நல்லா மூளை வேலை செய்ய ஆரம்பிக்கும்! (வாங்கிக் குடித்தவன் சடக்கென்று நின்று)..தூ!... நீராகரத் தண்ணி இது!

அல்லி: இதை நீங்க குடிச்சாத்தான் நம்ப கிராமப் பழக்க வழக்கத்தை மறக்காம இருப்பீங்க!...தேவர்கள் கடைஞ்செடுத்த அந்த அமிர்தம் கூட இதுக்கு ஈடாகாது......அப்படின்னு எங்க அப்பா சொல்வாங்க!

கோதண்: (கைகூட்பி) குட்டித் தெய்வமே! உன் திசைக்கு ஒரு கும்பிடு! (தன்னுள்) ம்...ம் கோ...தண்டம்!

[அவன் ஓடுகிறுன்]

[தெய்வானை வாயில் சேலைத் தலைப்பை வைத்துச் சிரித்த வண்ணம் அங்கு வருகிறுள்.]

தெய்: என்னம்மா அல்லி!

அல்லி: இன்னிக்கு ராத்திரி நாடகம் பார்க்க உங்கூடத்தான் நான் வருவேன்! ம்... அப்பாவும் அண்ணுச்சியும் இந்தக் கப்பலுக்கு வந்திடுவாங்க. அப்புறம் இப்படிச் சுத்த முடியாது!

மாசி: (திகைப்புடன்) கடுதாசி வந்துச்சாம்மா, அல்லி?

அல்லி: ஆமாங்க; அம்மா பேருக்கு தபாலு வந்துச்சு!

[மாசிமலைத்தேவர் ஓர் ஓரத்தில் திகைத்து நிற்கிறுர்.]

தெய்: அல்லி! உங்க அண்ணுச்சி வந்திட்டா' ஒனக்கு ஒரு அண்ணியும் கிடைச்சுடுவா! இல்லியா?

அல்லி: ஓ! எஸ்!...அக்கா, ஒனக்கு எங்க கந்தசாமி அண்ணுச்சி மூஞ்சி நெனைப்பிலே இருக்கா?

தெய்: ஊஹூம்!

அல்லி: நான்தான் பைத்தியக்காரி! ஒனக்கு மாணிக்கம் அத்தான் மூஞ்சி மட்டுந்தானே நெனைப்பிலே இருக்கும்!

தெய்: (முகத்தில் தட்டியபடி) குறும்புக்காரப் பொண்ணு நீ (மலைத்து நிற்கும் தந்தையை நோக்கி)

அப்பா, என்ன அப்படி மலேச்சுப் போய் நின்னுப்பிட்டீங்க? போய், வாய் கொப்பளிச்சிட்டு வாங்க! சுடுகஞ்சி வடிச்சிருக்கேன்!

மாசி: (திரும்பிப் பார்த்து) ஆகட்டும்மா! (சற்று நடந்து உள்ளுள் பேசுகிருர்) அக்கரைச் சீமையிலேருந்து கணக்குமுடிஞ்சு முத்தையன் வரப்போருராமே!... இந்த கடுத்தய் அவர் கடனை அடைச்சுப்பிட்றதாச் சொல்லியிருந்தேன்!...ரெண்டாயிரம் ரூபாய்க்கு என்ன வகை பண்ண முடியும்?...மக கண்ணுலம் வேறே இருக்கே!......(சற்று யோசித்து விட்டு) ஆமா, ஒண்ணு விட்ட மச்சான்காரருகிட்ட இருக்கிற நிலைமையை எடுத்துச் சொன்ன, அவரு சரின்னு சொல்லிப்பிடுவார்!...காளி ஆத்தா, நீதான் துணை இருக்கோணும், தாயே!

[கைகளைக் குவித்து வணங்கியபடி கண் கலங்கி நிற்கிருர்.]

## காட்சி 9

முச்சந்தி

[ட்ரம் சத்தம் லேசாகத் தேய்கிறது. ஜனங்கள் ஒருவர் பின் ஒருவராகப் பேசிக் கொண்டு செல்கின்றனர்.]

வேலன்: நேத்து ராவு அந்தத் தாசி மாதவி என்ன வெட்டு வெட்டினு? (நப்புக் கொட்டுகிருன்)

வேலாயி : யாரை? ஒன்னையா?. .இங்கன ஒரு கண்ணகி இருக்கிற நெனைப்பே இல்லே போலிருக்கு இந்தக் கோவலருக்கு! சரிதான், நடப்பியா?...

வே : வேலாயி! எங்க ராஜபார்ட் மாணிக்கம் எம் மாம் சோக்கா நடிச்சாரு? ..பாடினரு!

வேலா : அவங்க பேச்சும் பாட்டும் நடிப்புந்தான் சுத்து வட்டப் பதினெட்டு நாட்டுக்கும் தெரிஞ்சதாச்சே. உங்க சேக்காளி எங்க தெய்வானையைப் பார்த்துப் பாடுற தெம்மாங்குப் பாட்டுக்கு எதிர்த் தெம்மாங்கு பாடுற தெய்வானைப் பொண்ணும் சேர்ந்து நடிச்சாக்க, எம்மாங் கொண்டாட்டமாயிருக்கும்?

வே : நம்பளைப் போல உழைப்பாளிங்க எதிர் பார்க்கிற தருணத்திலே வருணபகவானும் மனமிரங்கி மழை பொழியிறதாட்டம் அழகாகவும் சோக்காகவும் இருக்கும்!...கூத்துக் கொட்டகையிலே அவங்க கை கோத்து நடிக்கப்போறது குத்தமில்லே! வாழ்க்கையிலே ஜண்ணடி மண்ணடியாச் சேரப்போறாங்களே! அதுவே போதும்!

வேலா : அங்கிட்டு கண்ணை ஓட்டுங்க...தெய்வானை யும் அது மச்சானும்...எட்டி நடையைப் போடுங்க!... காவடி ஆட்டம் ஆரம்பிக்கிற நேரமாயிடுச்சு!

[இருவரும் புறப்படுகிறார்கள்.]

## காட்சி 10

இரவு

[கோயிற் சந்நிதியின் முன் போடப்பட்ட நாற் காலிகளில் மணியக்காரர், அவர் மனைவி, ஊர்ப் பெரிய புள்ளிகள் அமர்ந்துள்ளனர். பொதுஜனங்கள் நின்றவாறு காத்திருக்கிறார் கள். 'டிப்டாப்' கோதண்டம் காமிராவும் கையுமாக மூக்குக் கண்ணாடி திகழ 'ஸ்டை லாக' நடந்து கொண்டிருக்கிறான். அவன் கையில் மாலை இருக்கிறது. எதிர்ப்பக்கம் நின்ற அத்தைமகளை ஓரக்கண்ணால் நோக் கியபடி நிற்கிறான் மாணிக்கம். காவடி ஆட்டம் நடந்து முடிகிறது.]

மணியக்காரர் : டேய் தம்பி! மாலையைக் கொண் டாப்பா!

கோதண்டம் : இந்தா வந்திட்டேம்பா!

[கோதண்டம் மறதியாக மாலையை தன் தந்தை யின் கழுத்தில் போடப் போகிறான்.]

மணி : டோய்! டோய்!

[மணியக்காரர் அம் மாலையை வாங்கி காவடிக்கார ரின் கழுத்தில் அணிவிக்கிறா.]

[கைதட்டல் ஒலி எழும்புகிறது ]

## காட்சி 11

[மாசிமலைத்தேவர் வீடு சங்கு ஊதிக்கொண்டு சிறுமி அல்லி முன்வர, பின்னால் மாணிக்கம் ஆடை அலங்காரத்துடன் துணிமணி தேங்காய் பழம் பணம் முதலியவைகளைத் தட்டில் வைத்து ஏந்தி வருகிறான். சிலர் உடன் வருகிறார்கள்.]

மாசிமலைத் தேவர் : எல்லாரும் வாங்க!...

பெரிய மனிதர் : பரிசம் போட வேண்டியதுதானே!

குரல்கள் : ஆமா! ஆமா! ..அமிர்தயோகத்துக்குள்ளாற எல்லாம் சல்தியா முடியட்டும்!

பெரிய மனிதர் : ம்...சொல்லு தம்பி மாணிக்கம்!

[பெரியவர் சொல்ல அவற்றை மாணிக்கம் திரும்பச் சொல்லல்.]

ஆறுகரை தலைக்கட்டைச் சேர்ந்த சின்னத் தம்பித் தேவர் மகன் மாசிமலைத் தேவரோட பொண்ணு தெய்வானையை நான் கல்யாணம் செய்துக்க எங்க குலதெய்வம் காளி அம்மாளுக்குப் பொதுவிலே நான் சம்மதிச்சு இப்போ பரிசம் போடுறேன்!

[உள்ளேயிருந்து தலை நீட்டிய காதலி தெய்வானையைப் பார்த்தபடி தட்டை எடுத்துமாமனிடம் நீட்டுகையில் பழம் ஒன்று நழுவுகிறது. ஒரு கணம் திகைக்கிறான்]

பெரியவர்: மாசிமலே! பரிசப்பணம் ஐநூறு இருக்கு!... எண்ணிக்கிடு!...சரி, நாங்க புறப்படுகிறேம்!

மாசி: நல்லதுங்க!...

[மாணிக்கம், தெய்வானையை நோக்கிச் சிரித்த படி செல்கிருன்]

## காட்சி 12

தோட்டம்

[காமிராவுடன் கோதண்டம் வருகிருன். பூஞ் செடியைப் படம் பிடிக்க முனையும்போது, அது ஆடி அசைவதைக் கண்டு பயப்பட தெய்வானை கலகலவென்று சிரித்துக் கொண்டு எழும்புகிருள்.

கோதண்டம்: ஆஹா, அற்புதமான காட்சி!.. பூவைப் படம் பிடிக்க வந்தவனுக்கு பூவையின் திவ்ய தரிசனம்! ..என் பாக்யம்!...தப்பு...! மாணிக்கம் பாக்யமே பாக்கியம்! தெய்வ..னே! உன்னைப் படம் பிடிக்க எண்ணு கிறேன்! இயற்கை அழகு என்ருல் எத்தனை நயாபைசா வென்று கேட்கும் செயற்கை அழகிகளிடம் உன் படத் தைக் காட்டி வெட்கப்படச் செய்யப் போகிறேன்!..

[படம் பிடிக்க முயல்கிருன்; அப்போது பெண் கள் சிலர் ஓடி வருகிருர்கள்]

ஒருத்தி: என்னைப் பிடிங்க!

இன்னொருத்தி: என்னை!

கோதண்டம்: ம்! (ஒவ்வொருத்தியையும் கைபிடிக்க எத்தனம் செய்கிருன்.)

வேலாயி : ஏ! என்ன அநியாயம் இது!...நம்ப நாட்டுப்புறத்து வளமையையே காத்துலே பறக்க விட்டு விடுவீங்க போலிருக்கே! ஐயா கோதண்டம்! இமைக் குத்தம் கண்ணுக்கு மட்டுப்படாது!"...நீங்க வந்த வழியை மறந்திடாமப் போங்க! (தோழிகளைப் பார்த்து) என்ன, ஆரம்பிக்க வேண்டியதுதானே?

பெண்கள் (ஒரே குரல்) ஓ!

கோதண்டம் : ஐயையோ! நீங்க! ஒண்ணும் ஆரம்பிக்க வேண்டாம்! நான் இதோ புறப்பட்டாச்சு! (ஓடுகிறான் )

[பெண்கள்: அனைவரும் தெய்வானையை மத்தியில் வைத்துச் சூழ்ந்து கும்மியடித்துக் கும்மாளமிட்டுப் பாடிமகிழ்கிறார்கள். இக்காட்சி முடிந்தவுடன், அங்கே மாணிக்கமும் வருகிறான். உடன் கோதண்டமும் வருகிறான்.]

மாணிக்கம் : தெய்வானை! இங்காலே வாயேன்! நம்ப தம்பி போட்டோ பிடிக்கப்போகுது ரெண்டு பேரையும்!

[தெய்வானை நாணுகிறாள். தோழிகள் அவளை இழுத்து வந்து மாணிக்கம் பக்கம் நிறுத்துகிறார்கள்.]

கோதண்டம் : வேல்முருகனுக்கு வீரத் தெய்வானை கிடைச்சது பெரிய காரியமில்லை! மாணிக்கம், உங்களுக்கு தெய்வானையும் தெய்வானைக்கு நீங்களும் கிடைச்சது தான் ஜோடிப் பொருத்தம்! பூவத்தக்குடி மக்கள் உங்கள் காதல் கதையை என்றும் பேசுவார்களாக!

(சிரிப்பு)

## காட்சி 13

வேலன் – வேலாயி

**வேலன்:** வேலாயிப் பொண்ணே! (சட்டை நுனியை நுகர்ந்தபடி) வாசனை தெரியுதா ஒனக்கு?

**வேலாயி:** தெரியுதே! பெரமாதமாயிருக்கே!

**வேலன்:** என்ன கற்பூர வாசனையா?

**வேலாயி:** (சிணுங்கியபடி) என்னைப் பார்த்தா ஒங் கண்ணுக்கு......

**வேலன்:** எல்லோரும் சொல்லிச் சொல்லிப் புளிச்சுப் போன பழைய மொழியை இந்த வேலன் சொல்லவே மாட்டேன்!.. அதனாலே நீ என்னமோ ஏதோன்னு நெனைச்சு உங்கண்ணைக் கசக்கி என்னோட மனசையும் கசக்கிப்பிடாதே! ..... கற்பூர வாசனையைப் புரிஞ்சுக்கிட தெய்வத்தாலே தானே ஏலும் வேலாயி?

**வேலாயி:** (சிரித்து) ஆமா! ஆமா!... இங்கே என்னைப் பாருங்களேன்! (முகப்பவுடர் டப்பாவைத் திறந்து பூசிக் கொள்கிறாள்.) எப்படி...?

**வேலன்:** (எதிரில் நிற்கும் அவளைப் பார்த்து விட்டுப் பிறகு டப்பாவைப் பார்க்கிறான்.)...எங்கே அது?

**வேலாயி:** எது?

**வேலன்:** உன் மூஞ்சியிலேயிருந்த கறுப்பு நிறம்?

**வேலாயி:** பூ! [illegible] பாத்து இளிச்சுதாம் பித்தானை

வேலன்; ஓஹோ! இப்படியும் ஒரு பழமொழி இருக்குதோ?. .நினைப்பிருந்தா இந்த வம்புப் பேச்சிலே மாட்டிகிட்டிருக்க மாட்டேன்! சரி, இந்த மாவு ஏது?

வேலாயி: உங்களுக்கு வாசனை கொடுக்க ஒரு சேக்காளி மாணிக்கம் இருக்கிறப்லே,எனக்கு மாவு கொடுக்க ஒரு தெய்வானை இருக்கமாட்டாளா?

வேலன்: ...! ஒரு அதிசயம் கண்டியா? காளி ஆத்தா கோயிலுக்குக் காப்புக் கட்டப்போற நேரம் பார்த்து, நம்ப ஊரு கங்காணி மூத்தையாத் தேவரும் அவரோடு மகன் கந்தசாமியும் வரப்போறாங்களாமே!...

வேலாயி: மேலவளவு கிணத்தடியிலே சேதி விளுந்துச்சு மச்சான்...ஆமா, கங்காணி மகன் கந்தசாமிக்கு அக்கரைச் சீமையிலேயே கண்ணாலம் ஆயிருக்குமோ?... போன கணக்குக்குப் போயித்தான் அஞ்சாறு வருசமாச்சே?...

வேலன்: அதெல்லாம் மாடிவீட்டு விசயம்! நம்பளாலே எட்டிப்பாத்துக் கணக்கிட முடியுமா?. .நம்ம தெய்வானைக்குக்கூட முறைகொண்டவன் இல்லே கந்தசாமி?

வேலாயி: ஆமா, மெய்தான்! அவங்க பணம் பணத்தோடே தானே மச்சான் பேச ஒப்பும்?...மாசிமலைத் தேவர் எங்கே? ஆனா ஒண்ணுங்க!...எங்க தெய்வானைக்கு உங்க கூட்டாளி மாணிக்கம்தான் பெரிய கோடீஸ்வரர்; தெய்வம்னு நினைப்பு!

வேலன்: மனங்கொண்டதுதானே மாளிகை! போதுமிங்கிற பொன்னான மனசைப் பக்குவப்படுத்தி வச்சிருக்கிறதிலே நம்ப மாதிரி ஏழை பாழைங்களுக்கு ஈடு யாருமே இருக்க மாட்டாங்க!

வேலாயி: ஆமா, ஆமா!

வேலன்: ஊஸ்... இந்தா, கிள்ளாம இருக்க மாட்டயாங் காட்டி.

வேலாயி: என்ன மச்சான், யாராம் ஒங்களைக் கிள் ளுறது? அம்மாங் கிள்ளுக்கீரையாப் போயிட்டீகளாமா?

வேலன்: அதெல்லாம் ஒண்ணுமில்லே! பசிதான் வவுத்தைக் கிள்ளுது!

வேலாயி: ப்பூ! இம்புட்டுத்தானு! சரி, சரி. வாங்க...

## காட்சி 14

கங்காணி முத்தையாத் தேவர் வீடு.

[தேவரும் அவரது மகன் கந்தசாமியும் காணப்படுகின்றனர். தேவர் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டிருக்கிருர். கந்தசாமி நின்றுகொண்டிருக்கிருன். தேவரின் மகள் சிறுமி அல்லி பரத நாட்டிய உடை திகழ நிற்கிருள். அங்கு மணியக்காரர் பிள்ளை கோதண்டமும் வருகிருன்—பான்ட், ஸ்லாக் ஷர்ட், காமிரா, கண்ணுடி சகிதம்.]

தேவர்: உட்காருங்க, தம்பி!

கோதண்: உட்கார், அல்லி.

அல்லி: நான் உட்கார்த்திடறேன். எனக்குப் பதிலா நீங்கள் ஆடுறீங்களா?

கோதண்: நீ ஆடு, நான் தாளம் போடறேன்.

அல்லி: (தந்தையிடம்) நீங்க கப்பல்லே வந்த அசதிதீந்து போயிடுச்சில்லே?

தேவர்: ஓ!...கொஞ்ச நஞ்சம் மிச்சம் மீதியிருந் தாலும் உன் நாட்டியத்தைக் கண்டா சரியாப்போயிடும்! கண்ணு!...ம்! சல்தியா ஆடு! அப்பறமா கோயில் காப்புக் கட்டுக்குப் போகணும்!...

அல்லி: அண்ணாச்சி! நீங்க தூங்கிப் போயிடாதீங்க!

கந்தசாமியும்–கோதண்டமும்: இல்லே இல்லே.

[அல்லி பரத நாட்டியம் ஆடுகிருள். கோதண்டம் தை! தை! என்று தாளம் போடுகிருன். நாட்டியம் முடிகிறது.

[அப்போது காரியஸ்தர் வந்து கங்காணியின் காதுகளில் ஓதுகிருர்.]

தேவர்: அப்பிடியா? மாசிமலை அம்புட்டுத் தொலை வுக்கு ஆகிப்பிட்டாரா?...ம், வரட்டும்!...[கோபப்படு கிருர்]

## காட்சி 15

மாசிமலைத்தேவர் வீடு

[மாசிமலைத் தேவர் 'திருவாசக'ப் பாடல் ஒன்றைப் படித்துக் கொண்டிருக்கிறார். நெற்றியில் திருநீறு. ஹரிக்கேன் விளக்கு ஒளி]

தெய்வானை: அப்பா, அப்பா!

மாசி: என்னம்மா?.. மனசிலே இருக்கிறதைச் சொல் அம்மா!..

தெய்: (வெட்கப்பட்டுப் பேசாமல் நின்ற பிறகு பேசுதல்) இந்தாங்க அப்பா, படம்!

மாசி: அன்னிக்குச் சொன்னியே அதா?...தை மாசம் காணவேண்டிய காட்சியை இப்பவே கண்டிட்டேன்!... நீயும் உன் மச்சானும் படத்திலே ரொம்ப அழகாகயிருக்கீங்க!...இதை மூணும் மனுசங்க யார் கண்ணிலேயும் காட்டிப்புடாதேம்மா தெய்வானை! கண்திருஷ்டி விழுந்திடும்!...

தெய்: சரிங்க அப்பா!

மாசி: ரங்கூன் கப்பலிலே வந்திருக்கிற என் மச்சான் முத்தையாத் தேவரு என்னை அழைச்சாராம். போயிட்டு, அப்படியே காளி ஆத்தா கோயிலுக்குப் போயி துர்நூறு குங்குமம் கொண்டாரேம்மா!...இன்னைக்கு செட்டித் தெரு மண்டகப்படியாம்!

தெய்: போனதும் வந்ததுமா திரும்பிடுங்க அப்பா!... பொன்னாங்கண்ணிக் கீரைக்குப் புளிபோட்டு ஆக்கி யிருக்கேன்!

[பேசிக்கொண்டே தந்தைக்குத் தெரியாமல் புகைப்படத்தைப் பார்க்கும் மகளை தேவர் பார்த்தும் பாராததுபோல் பாவனை செய்து கிளம்புகிறார்.]

## காட்சி 16

### தெரு

[கந்தசாமி மைனர் போல கழுத்துச் சங்கிலி, பட்டுச் சொக்காய்த் திகழ வந்து கொண் டிருக்கிறான். அவனுடன் அவன் தங்கை அல்லியும் வருகின்றாள்.]

அல்லி: எல்லாருக்கும் அவல்கடலை கொடுத்தியே, நம்ப தெய்வானை அக்காவுக்கும் கொடுக்க வேணாமா, அண்ணாச்சி?

கந்தசாமி: அல்லி, இப்போ உன்னையும் கையோட அழைச்சுக்கிட்டு வந்திருக்கிறது எதுக்குத் தெரியுமா?

அல்லி: கோயிலுக்குத் திருநாளுப் பார்க்க!

கந்த: அது அப்புறமாத்தான்.

அல்லி: இப்போ.....

கந்த: (பையைக் காட்டி) இந்தப் பையை தெய் வானை கிட்டே நான் தந்ததாகக் கொடுத்துப்பிட்டு ஓடியா!

அல்லி: நம்ப தெய்வானை அக்காகிட்டேதானே?

கந்த: உஸ்!...தெய்வானை அக்கா இல்லே!......தெய்வானை அண்ணின்னு இனிமே சொல்லோணும்!

அல்லி: நீங்க சொல்றதும் சரிதான். மாணிக்கம் எனக்கு அண்ணச்சிதானே?

கந்த: ஸ்...மாணிக்கமும் ஆச்சு!...வைடூரியமும் ஆச்சு!...அப்பறம் ஒனக்கு எல்லாத்தையும் வெவரமாச் சொல்றேன். நீ போய் நான் சொன்னபடி செய். நான் அந்த முனாங்கிலே நின்னுகிட்டிருப்பேன். சுருக்கண ஓடியா!

அல்லி: இதோ ஒரு மினிட்டுலே வாறேன்!

## காட்சி 17

### மாசிமலைத்தேவர் வீடு

[அழகே உருவாகக் கோயிலுக்குப் புறப்படும் தெய்வானை கண்ணடியை எடுத்துத் திலகம் இட்டுக் கொள்கிருள். அது சமயம் அல்லி ஓடி வருகிருள்.]

அல்லி: அண்ணியோவ்!

தெய்வானை: (எட்டிப் பார்த்து) யாரு அல்லியா? என்னம்மா ஒறவு முறை புதுசா இருக்கு?

அல்லி: இத்தினி நாளும் புரியாம இருந்திச்சி; இப்ப எங்க கந்தசாமி அண்ணச்சி சொல்லிக் கொடுத்தாக! இனிமே நீ எனக்கு அண்ணியேதான்!

தெய்: ஓகோ! உங்க அண்ணச்சியா? அவுக சுகமா இருக்காங்களா? கப்பலிலேருந்து வந்தவங்க ஒனக்கு கப்பல் சாமான் வாங்கியாந்திருப்பாங்க! ம்...(பெருமூச்சு)

அல்லி: அண்ணி, இந்தா ஒனக்கு ஒரு பை சாமான் கொண்டாந்திருக்கேன்.

தெய்: ஏது?

அல்லி: எங்க கந்தசாமி அண்ணாச்சி ஒங்கிட்டே கொடுத்திட்டு ஓடியாரச் சொல்லுச்சு! (பையை நீட்டு கிருள்.)

[தெய்வானை ஆவலுடன் பிரிக்கிருள். துணி, மணி சில டப்பாக்கள் விழுகின்றன. அத்துடன் இருந்த படமொன்றினையும் பிரிக்கிருள்.]

தெய்: (திகைத்து) அல்லி, என்ன இது?

அல்லி: (அதிர்ச்சியுடன்) எங்க அண்ணாச்சி படம் இது? இதை ஏன் ஒங்களுக்கு அனுப்பியிருக்குது?...... மாணிக்கம் அண்ணாச்சி கண்டாக்க என்ன நெனைப் பாக?...வீட்டுக்குப் போனதும் நல்ல பாடம் சொல்லிக் கொடுக்கணும் எங்கஅண்ணாச்சிக்கு. அண்ணி!...அக்கா... அக்கா!...தப்பா நெனைக்காதே! இந்தப் படத்தை நான் எடுத்துக்கிறேன்; நீ மீதிச் சாமானையெல்லாம் எடுத் துக்க!

தெய்: (முகத்துடன் முகம் இணைத்து) அல்லி! உன் அன்பும், அமிர்தமும் என்வரைக்கும் ஒண்ணுதான். நான் எம்பிட்டோ புண்ணியம் செஞ்சிருக்கணும். ஆனா, இந்தப் பையை மட்டும் எடுத்திட்டுப் போயிடு!...

[அல்லி தயங்கியவாறு கண்களைத் துடைத்தவாறு திரும்புகிருள்.]

[தெய்வானை குழப்பமடைந்த நிலையில் முன்னும் பின்னும் நடக்கிருள்.]

(அல்லியின் குரல் மீண்டும் எதிரொலிக்கின்றது)

"இத்தினி நாளும் புரியாம இருந்திச்சு! இப்ப எங்க கந்தசாமி அண்ணுச்சி சொல்லிக் கொடுத்தாக! இனிமே நீ எனக்கு அண்ணியேதான்!"

தெ வதனையுடன் தனக்குள்ளாக) எல்லாம் ஒரே மூடுமந்தர மாட்டம் இருக்கே!...நேத்து அக்கரைச் சீமையிலிருந்து இறங்கின அந்த கந்தசாமி அத்தான் ஏன் இப்படிச் சொல்லிக் கொடுத்தாரு?—தன்னோட படத்தை எங்கிட்டே எதுக்கு அனுப்பிச்சாரு?—ஒரு சமயம் என்னை அவுக...! ஊஹூம்...அப்படி நடக்கவே நடக்காது!

(மாணிக்கத்தின் குரலும் எதிரொலிக்கிறது)

"தெய்வானை! என்னை நம்பு! நான் உனக்கே தான்! நீ எனக்கேதான்!..."

[தெய்வானை கண்களைத் துடைத்துக் கொள்கிறாள். மாசிமலைத் தேவர் வந்து கொண்டிருக்கிறார். தன் இடது தோளில் போட்டிருந்த துண்டை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொள்கிறார்.]

தெய் : (பதட்டத்துடன்) அப்பா!...

மாசி : (மகளை நிமிர்ந்து பார்த்து கேசத்தை வருடி) ஏம்மா, நீ வேறே அழுதியா?...நான் அழுகிறது பத்தாதா கண்ணு?

தெய் : என்னப்பா பேசுறீங்க?...நம்ப ரங்கூன்கார மாமாவைக் கண்டீங்களா?

மாசி: கண்டேம்மா, கண்டேன்! உன்னோட ஆசைக் கனவையும் மாணிக்க மாப்பிள்ளைக்குச் சொந்தமான உன் அன்பான நெஞ்சையும் தன்னோட அருமைப்பிள்ளை கந்தசாமி காலடியில் பாத காணிக்கை வைக்கணும்னு சொல்றாரு உன் மாமன்!...என் மச்சினன்!

தெய் : (விழித்தபடி) அப்பா!

மாசி : இன்னுமா விளங்கல்லே?...நீ அந்தக் கந்தசாமியைக் கட்டிக்கோணுமாம்! இல்லாட்டி, நான் அவருக்குப் பட்டிருக்கிற ரெண்டாயிரம் ரூபாய் கடனுக்கு வழி சொல்லோணுமாம்!...இல்லாட்டி, என் மானத்தை ஏலத்துக்கு விட்டுப்பிட்டுத்தான் இவரு தூங்குவாராம்!...

தெய் : அய்யோ! தெய்வமே! காளி ஆத்தா!

மாசி : தெய்வானை...கண்ணிலே கண்ணீரை வச்சுக் கிட்டு அழைச்சா, காளி ஆத்தா வரமாட்டா!...ஏந்தெரியுமா, மகளே! நம்ப கண்ணீருதான் ஆத்தாளுக்கு வேடிக்கையும் விளையாட்டும்!...நம் பிணங்களை சோதனை செய்யிறதிலே தெய்வத்துக்கு ரொம்ப ஆசை. ஆனா ஒங்க ரெண்டு பேர் விசயத்திலே மட்டும் அப்படி நடக்கவே நடக்காதுன்னு நான் முந்தி ஒருநாள் உங்கிட்டே சொன்னேனே, அது பொறுக்காம ஆத்தா பழிவாங்கப் போறாப் போலேருக்கு! கண்ணாலத்தை எப்பிடி நடத்தி முடிக்கிறதின்னே புரியாம நான் திக்குமுக்காடிப் போயிருக்கிற வேளையிலே இந்த இடியை என்னாலே எப்படி அம்மா தாங்க ஏலும்?

தெய் : நீங்க என்னப்பா பதில் சொல்லிவிட்டு வந்தீங்க?

மாசி : ஏம்மா இப்பிடி சந்தேகமாக கேட்கிறே?—உன்னை பணயம் வச்சிட்டு வருவேனா அம்மா?... என்னைத்தான் கண்ணே ஈடு வச்சுக்கிட்டு வந்திருக்

கேன்! இன்னம் ஒரு கிழமைக்குள்ளாற அவங்க கடனை கட்டிப்பிடணும். இல்லாட்டி, கோர்ட்டுக் கச்சேரிக்குப் போவாணும்!...ம்..கடன் கழிஞ்சாத்தான் என் உசிரு உடம்பிலே இனித்தரிக்கும்!

தெய் : (தந்தையின் கரம்பற்றி தழுதழுத்த குரலில்) அப்பா! வீணு மனசை அலட்டிக்காதீங்க! மச்சான் வரட்டும்! யோசனை பண்ணலாம்!

மாசி : (பதறி) நம்ப வினை நம் மனசோடேயே தங் கட்டும்: அவங்க காதுக்கு எட்டவேண்டாம் அம்மா!

[அப்போது மாணிக்கம் நுழைகிறுன். மாசிமலைத் தேவர் மலைத்து நிற்கிருர்.]

மாணி : மாமா! எல்லாச் சங்கதியையும் கேட்டுக் கிட்டுத்தான் இருந்தேன். கங்காணி வீட்டிலே நடந்த நடப்பை வேலன் வேறே வந்து சொன்னுன். நீங்க ஒண்ணுக்கும் கவலைப்படாதீங்க. எந்தலையை அடகு வச்சாச்சும் ரெண்டாயிரம் ரூவா சேகரம் செஞ்சிக்கிட்டு வந்து தாரேன். ஒங்க கடன் தீர்ந்ததும், எங்க கண்ணலம் நடந்தாப்போதும். மாமா! என்னேட திட்டம் நிறைவேறினுத்தான் எனக்கும் சோறு தண்ணி செல்லும்! நான் போயிட்டு வாரேன்!

[புறப்படுகிருன்.]

## காட்சி 18

ரங்கூன் முத்தையாத்தேவர் வீடு

[சிகரெட்டும் கையுமாக கோதண்டம் வருகிறன்.]

கோதண் : மிஸ்டர் கந்தசாமி இருக்காரோ?

அல்லி : வாங்க, வாங்க! அண்ணுச்சி தூங்குறுங்க! என்ன விஷயம்?

கோதண் : (புகை விழுங்க முயன்று இருமியபடி சிகரட்டைக் காலால் அணைக்க, அது காலைச்சுட திண்டாடியவாறு) அல்லி, இதை அண்ணுச்சிக்கிட்டே சேர்த்துப்பிடு...பிரிச்சுப் பார்த்திடாதே, தாயே!

அல்லி : ஓ..கே!

கோதண் : போய் வாரேம்மா!

அல்லி : நல்லது மகனே!

[கோதண்டம் சிரித்துக்கொண்டே திரும்பிப் போனவுடன் கவரைப் பிரிக்கிருள் அல்லி. அதற்குள் கந்தசாமி வந்துவிடுகிருன்.]

கந்தசாமி : ஏ அல்லி! அன்னிக்கு நீ எனக்குப் பாடம் படிச்சுக் கொடுத்ததுக்கு கிடைச்சிதே பிரப்பம் பழம், மறந்திட்டியா? அந்தக் கூட்டை மட்டும் பிரிச்சியோ, அப்புறம் அம்மா வந்தாக்கூட பயப்படமாட்டேன். மூத்தது மோளை, இளையது காளைன்னு ஆயிடும் போலிருக்கு!...ம்...கொண்டா இங்கே! உடன் பிறந்தே

கொல்லும் வியாதிபோல இருக்குது! (கவரைப் பிடுங்கிய தும் அல்லி செருமியபடி ஓடுகிறாள். அவன் அதிலுள்ள படத்தை எடுத்துக் கொள்கிறான்.)

(தனியாக)

...தெய்வானை! இப்பத்தான் உன் அழகுக்கு மதிப்பு அதிகமாகுது!...என் பக்கத்திலே உன்னை படத்திலே இப்போ இருக்க வச்சது. கணக்கா எப்பவும் என்னோ டேயே நீ இருந்திடத்தான் போறே!...மூடவனுக்குக் கொம்புத்தேன் கிடைச்சதாக எந்தக் கட்டுக் கதையிலே கூட படிக்க முடியாது. ஆனதாலே நீ என் சொத்தே தான்!...கோ...தண்டம், நீ வாழ்க! என் போட்டோவை யும் தெய்வானை படத்தையும் ஒட்டுவேலை செஞ்சு ஒண்ணா இருந்து எடுத்தமாதிரி செஞ்சிருக்கியே இதுவே ஒரு நல்ல சகுனந்தான்! ஒன்னோட அருமையான புத்தி அயல் நாட்டிலே இருந்தா எவ்வளவோ உபயோகமா யிருக்கும்! நீ வாழ்க!

[படத்தை மார்புடன் அணைக்கிறான்.]

## காட்சி 19

மாணிக்கம் வீடு

[முன்பு கோதண்டம் எடுத்துத் தந்த படத்தை வைத்துக் கண்ணீர் வடித்த வண்ணம் இருக்கிறான் மாணிக்கம்.]

மாணி: தெய்வானை! உன்னை நான் எந்த முகத்தோட வந்து பார்க்கப்போறேன்?—ரங்கூன்காரன் பணம் ஊர் நல்லவங்க வாயைக்கூட கட்டிப்பிடுதே!...என்னை நம்பி

கடன் தர்ரேனென்று சொன்னவங்க கூட இப்ப நெருக்கு வெட்டிலே மாட்டேன்னிட்டாங்களே!...வயித்துக்குப் படியளந்த சாயாக் கடையிலேகூட தீ வச்சிட்டானே அந்த முத்தையாத்தேவன்?...ஊரிலே உலகத்திலே நடக்காத கதையா, பரிசம் போட்ட சமயத்திலே இப்படி வந்து காத்தாடப்பார்க்கிறாங்களே? சட்டங்கூட இவங்க நிழலைக் கண்டு பச்சோந்தியாயிடுச்சே!...ஐயோ, தெய்வானை!...நீயும் நானும் இந்தப் படத்திலே மாத்திரந்தான் இப்படிச் சேர்ந்து இருக்க வேண்டியவங்களா ஆயிடுவோமா?...

(ஒரு கணம் யோசனை...பற்களைக் கடித்தல். பிறகு உள்ளே நுழைந்து கத்தியுடன் திரும்பி)...ம்...எனக்கு மட்டும் தெய்வானை கிடைக்காம இருக்கட்டும் அப்பாலே என் வெறி அடங்கு மட்டும் என் எதிரிகளைப் பழி வாங்கிப்பிடுறேன்.

[கதவு தட்டப்படும் ஓசை கேட்கிறது.]

மாணிக்கம் : யாரது?—

வேலன் : நான்தான் மாணிக்கம். வேலன், தெய்வானையோட அப்பாவுக்கு ரொம்ப தக்காமுக்கியா இருக்காம்! ஓடியாங்க!

மாணி : ஐயோ!—பட்டகாலிலே படுதே!...ம்...மண்ணிலே பொறந்த மனுசாக செய்யுற தீவினை பத்தாதின்னு, நீ வேறே எங்களை இப்படிச் சோதிக்கிறே, ஆத்தா முத்தவளே?—

## காட்சி 20

மாசிமலைத்தேவர் வீடு

[மாசிமலைத்தேவர் படுத்த படுக்கையாகக் கிடக்கிருர். அருகே தெய்வானை மருந்தும் கையுமாகக் கண்ணீர் தாங்கி அமர்ந்திருக்கிருள்.]

மாசி : அம்மா தெய்வானை! எனக்கு என்னமோ பயமாயிருக்கு!...ஒன்னை ஏமாத்திடுவேன் போலிருக்குது!...என் ஆவி அடங்கிறத்துக்குள்ளே ஒன்னை மாலையும் கழுத்துமாப் பார்த்தால்தான் அம்மா என் சடலம் வேகும்!

[மாணிக்கம் எல்லாவற்றையும் கவனித்து உள்ளே நுழைகிருன்.]

தெய் : மச்சான்! (விம்மியபடி அவனை நெருங்குகிருள்.)

மாணி : (அவளினின்றும் விலகி) தெய்வானை! தெய்வானை!

தெய் : மச்சான்! ஏன் அப்படி என்னை விட்டு எட்டி எட்டிப் போறீங்க! எனக்குப் பயமாயிருக்கே, மச்சான்!

மாணி ; ஒனக்கும் ஒங்க அப்பாவுக்கும் நான் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய ஏலாதவனுகிப் பிட்ட பின்னலே, நான் ஒன்னோடே ஒட்ட எப்படி முடியும்? (கிழவரை நெருங்கி மண்டியிட்டு) மாமா! என்னை நீங்க மன்னிச்சிடுங்க. ஜாதி ஆளுங்களோடே தெய்வ

மும் சேந்து என்னை வஞ்சிச்சுப்பிடுச்சு?...ஆமாம்! ஒரு நாளைக்கு அவங்களைப் பழிக்குப் பழி வாங்கத்தான் போறேன்...

(அவன் பார்வை கீழே கிடந்த புத்தகத்தில் லயிக்கிறது) என்ன?(எடுத்துப் படிக்கிறான்.) ஜன்ம விரோதிங்களானாலும் அன்பு காட்டணுமா? யார், காந்தி மகாத்மாவோட உபதேசமா?...

(மெல்ல எழுந்து, சுவரில் இருந்த மகாத்மா படத்தை அடைகிறான்)...மகாத்மா! கடைசியிலே நீயுமா என்னை வஞ்சனை செய்யப்போறே ?...ஐயோ!...தெய்வானை! தெய்வானை!

[பைத்தியம் பிடித்தவன் போல ஓடுகிறான்.]

## *காட்சி 21*

மாசிமலைத்தேவர் வீடு

[சோகபிம்பமென வீற்றிருக்கும் தெய்வானை கையிலுள்ள மாணிக்கத்தின் மோதிரத்தையும் கடிதத்தையும் பார்த்தவாறு கண்ணீர் பெருக்கிக்கொண்டிருக்கிறாள்.]

அன்புத் தெய்வானை!

உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். என்னை மன்னித்துவிடு! உன்னைக் கொஞ்சிக் கேட்கிறேன். என்னை மறந்து விடாதே! கண்ணுக்குத் தெரிந்த மனிதர்களும் கண்ணுக்குத் தெரியாத தெய்வமும் நம் இரண்டு

பேருடைய இன்பக் கனவையும் சிதைத்து விட்டனர்! என்னுடைய உயிரை உன் காலடியில் வைத்து விட்டு, உடலை மட்டும் சுமந்து செல்கிறேன். எங்கேயென்றுதானே கேட்கிருய்? அது எனக்கே தெரியாது!— எந்தப் பணம் என் எண்ணங்களில் மண்ணைப் போட்டதோ; அதே பணத்தை என் பிறந்த மண்ணில் வீசி விளையாடும் நிலை வந்தவுடன்தான், நான் இனித் திரும்பு வேன்; ஆனல் ஒன்று, என்னை நீ கோழை என்று மட்டும் முடிவு கட்டிவிடாதே!... என் வாழ்க்கையில் குறுக்கிட்டவர்களைப் பழி வாங்கிடத்தான் நினைத்தேன். ஜென்ம விரோதியானாலும், அன்பு காட்டு என்ற காந்தித் தெய்வம் என் மனசை மாற்றி விட்டார்! தெய்வானை! நான் தெம்மாங்கு பாட, நீ எதிர்த் தெம்மாங்குப் பாடல் பாடுவாயே அந்தப் பாட்டை நீ எப்படி மறக்க முடியும்? மணவறையில் நீ என் அருகிருந்து உன் அன்பைக் கண்களின் வழியே செலுத்தும் போது, உன் பூ விரலிலே போட்டு நான் அழகு பார்க்க வேண்டுமென்று ஆசைப் பட்ட இந்த மோதிரத்தை அனுப்பியிருக் கிறேன். இதுதான் என் நினைவுப் பரிசு! உன் ஆசை முகத்தை மீளவும் காண நான் கொடுத்து வைத்திருக்கிறேனே, என் னவோ?

இப்படிக்கு,
மாணிக்கம்.

தேவர்: கடைசிலே, எம் மகளை மாலையும் தாலியு மாப் பார்த்து கொடுத்து வைக்காத பாபி ஆகிப்பிடுவேன் போலேயிருக்குதே! ஐயோ, தெய்வமே!

[தெய்வானை ஓடிப்போய் தந்தையின் கைகளைப் பற்றுகிருள்.]

தெய்: அப்பா? அப்பா!...உங்க ஆசையை வீணடிக்க மாட்டா ஊராளும் ஆத்தா! ரங்கூன் கங்காணிவூட்டுக்கு மருமகப் பெண்ணுப் போறேனுங்க, அப்பா! பாக்கு வெத்திலையோட இந்தச் சுபச் சேதியைச் சொல்லியனுப் புங்க அப்பா!

[சிரிப்பை வரவழைத்துக்கொண்டே விம்மு கிருள்]

தேவர்: நெசமாவா, தெய்வானை...?

தெய்: ஆத்தா ஆணையான வாக்காக்கும் இது!

[கிழவன் கைகளை உயர்த்தி தெய்வத்தைக் கும் பிடுகிருன்]

## காட்சி 22

[கங்காணி மகன் கந்தசாமியைச் சுற்றிலும் அவன் நண்பர் குழாம்]

கோதண்டம்: கங்கராச்சுலேஷன்ஸ் கந்தசாமி! நான் படத்திலே உங்களையும் தெய்வானையையும் ஒண்ணுக் கினது பெரிதில்லே; விடிஞ்சதும் உங்களையும் தெய் வானையையும் வாழ்க்கை மேடையிலே ஒண்ணுக்கப் போறதுதான் பெரிசு!

(ஆமாம் போடுகிருர்கள்)

கந்தசாமி: இந்தா தம்பி! கல்யாணப் பத்திரிகைக் கட்டு! பட்டுவாடா செஞ்சுப்புடு!

[பெரிய கட்டை காட்டுகிருன்]

கோதண் : அப்படியே உங்க ரேக்ளாவையும் தந்திடுங்க அண்ணே!

(சிரிப்பு

## காட்சி 23

மாசிமலைத் தேவர் இல்லம்

[மணக்கோலத்தில் தெய்வானையும் கந்தசாமியும் அமர்ந்திருக்கிருர்கள். மாசிமலைத்தேவர் கண்ணீர் ததும்ப அக்காட்சியைக் காண்கிருர். நடனப் பெண்டிர் இருவர் நாட்டியம் ஆடுகிருர்கள். தெய்வானையின் கண்கள் நீரைக் கொட்டுகின்றன.]

## காட்சி 24

ரங்கூன் முத்தையாத்தேவர் வீடு

[பள்ளி அறை. கந்தசாமி மாப்பிள்ளை தர்பாருடன் ஆனந்தமாக அமர்ந்திருக்கிருன். கதவைத் திறந்து உள்ளே தெய்வானையைத் தள்ளிவிடுகிருர்கள்.]

கந்தசாமி: தெய்வானே!.,.ஸ்...சும்மா வா...ம்!...வந்து குந்து!...ம்...ம்! கனுக்கண்டா அதை நாம அப்பவே மறந்திடுவோமில்லே, அதாட்டம் நடந்ததையெல்லாம் மறந்திடு!...என்னமோ, என் கனு பலிச்சிட்டுது!...நான் ஒன்னே அடைஞ்ச விதம் சரியோ தப்போ, எப்படியோ அவங்க அவங்க லவிதப்படிதான் எல்லாம் நடந்திருக்க வேணும்!...ஆனு, நீ மட்டும் எனக்குக் கெடைக்கல் லேன்னு, இந்நேரம் நான் கிறுக்காகியிருப்பேன்!...தெய்வானே! நான் உன் புருஷனில்லையா?...சொல்லு தெய்வானே! (தெய்வானேயின் கையைப் பற்றுகிருன்.)

தெய்: (குனிந்துகொண்டே) ம்!...

கந்தசாமி: இனி ஒனக்கு எம்பேரு மட்டுந்தானே ஞாபகத்திலே இருக்கோணும்?

தெய்: ம்!...

கந்த: நீ 'ம்'னு சொல்றது மெய்யானு, எங்கே சிரி பார்க்கலாம்!

தெய்: ஹஹ்ஹா! (சிரிக்கிருள்.)

கந்த: தெவ்வானே! இப்பத்தான் எனக்கு சத்தியமா நிம்மதி வந்துச்சு! இனி உன்னே எந்தலேயிலே தூக்கி வச்சுக்கிட்டு ஆடுவேன்.

## காட்சி 25

கந்தசாமியின் வீடு

[பெட்டியைத் திறந்து வைத்துக்கொண்டு தெய்வானை உட்கார்ந்திருக்கிருள். தன் உடலை ஒரு முறை குனிந்து பார்த்துக் கொள்கிருள். உடல் நிரம்ப நகைகள்.]

தெய்வானை: (தன்னுள்) எல்லாம் கடைசியிலே கனு மாதிரித்தான் நடந்திடுச்சு; நடந்ததை மறந்திடத்தான் எத்தனப்படுகிறேன்.. ஆனு, முடியலையே?..(தந்தையின் பொருள் ஒன்றைக் கையிலெடுத்து)...அப்பா ஒங்களை இனிமே நான் எந்தப் பிறப்பிலே காணப்போறேன்?... அந்தக் காலத்திலே பாழாப்போன பணத்துக்கும் காசுக்கும் நம்ப வாழ்க்கையையே அடகு வச்சோம். இப்ப அதே பணம் எங்காலடியிலேயே அடைக்கலமாகக் கிடக்குதே!...(மாணிக்கம் அளித்த நினைவுப் பரிசான மோதிரத்தைப் பார்த்து) மாணிக்க மச்சான்!...நீங்க இனி இந்த ஊர்ப்பக்கம் வருவீங்களா, மாட்டீங்களா?...நீங்க தந்த பரிசப் பணத்தை அப்படியே வச்சிருக்கேன்!... என்னிக்கு வந்து வாங்கிடப் போறீங்களோ?...காளி ஆத்தா!...எனக்குக் கனவைக் காட்டிக் கடைசியிலே என்னைக் காளவாயிலே திணிச்சுப்புட்டியே, தாயே!

[கண்கள் நீரைக் கொட்டுகின்றன; துடைத்துக் கொள்கிருள் தெய்வானை.]

அல்லி: அண்ணி! அண்ணி!

தெய்: வாம்மா!...நீ இருக்கிறது எனக்கு எம்பிட்டோ நிம்மதி! நீ ஒரு தரம் நாட்டியம் ஆடேன் மனசுக்கு ஆறுதலாயிருக்கும்!

[அல்லி நடனம் ஆடுகிருள்]

[நடனம் முடிந்து அல்லி திரும்புகையில் தெய்வானை மயங்கிக் கீழே சாய்ந்திருப்பதை உணர்ந்து அலறுகிருள்.]

அல்லி: அண்ணாச்சி! அண்ணாச்சி!

கந்தசாமி: (ஓடிவந்து) என்னம்மா அல்லி! ஆ... தெய்வானை!.. ..(அவளைத் தன் மடியில் கிடத்தியவாறு) கண்ணைத் திற தெய்வானை! ..உன்னைக் கருத்தாப் பார்த்துக்கச் சொல்லிட்டு அப்பாவும் அம்மாவும் யாத்திரை போனாங்களே! என்னம்மா செய்யிறது?...அல்லி கொஞ்சம் தண்ணி கொண்டா!...நாட்டு வைத்தியர் ஐயாவையும் கையோட இட்டுக்கிட்டு வா!

[அல்லி கொடுத்த தண்ணீரை தெய்வானையின் முகத்தில் தெளிக்கிருன் கந்தசாமி.]

தெய்: (கண்களை விழித்து எழுகிருள்.) அத்தான், ஒண்ணுமில்லே!...தலை சுத்துச்சு; அம்பிட்டுத் தான்!...வாங்க சோறு சாப்பிடலாம்...

கந்தசாமி: (சிரித்தபடி) நல்ல காலம், என்னைக் காப்பாத்தினயே, தெவ்வானை!...(கண்களைத் துடைத்து) இன்னிக்கு அந்திக்கு நாம்ப கீரமங்கலத்தை நாடி ரேக்ளாவிலே படத்துக்குப் போகணும்! குளிச்சு முழுகிக் கிளம்பறதுக்கு தயாராகயிரு! (தெய்வானை மருண்டு நிற்கிருள்.)

அல்லி: அண்ணி, அண்ணி; நீங்க பயப்படாதீங்க! உங்க ரெண்டு பேரோடே நான் வரல்லே! நீங்க போயிட்டு வாங்க!...

[இருவரும் சிரிக்கிருர்கள்.]

## காட்சி 26

[காளியம்மன் கோவிலில் விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மணியோசையும், தாரை தப்பட்டை ஒலியும், பிறிதோர் இடத்தில் கும்மியடிக்கும் சத்தமும் கரக ஆட்டமும் இடையிடையே ஜனங்களின் கசமுசப் பேச்சும் கேட்கின்றன.]

பவளக்கொடி: (அதிசயத்துடன்) பொன்னம்மா இந்தக் காளி ஆத்தா கோயில் பக்கம் வந்ததும் நம்பளை யும் அறியாம நாம் தன்னாலே இங்கே நின்னிட்டோம், கண்டியா?

பொன்னம்மாள்: (பக்தி கனிய) ஆமா, அக்கா, எல் லாம் தாயோட மகிமையாக்கும்! காப்புக்கட்டி முடிஞ் சிருச்சு; இனி தேரோட்டம் வரைக்கும் ஊரே திமிலோகப் பட்டுப் போயிடும்!

பவளக்கொடி: மெய்தான், தங்கச்சி இங்கே வந்த தும், உனக்கு இன்னொரு நினைப்பு வரலையா?

பொன்னம்மாள்: இல்லியே, பவளக்கொடி அக்கா! என்ன நினைப்பு அது?

பவளக்கொடி: அதோ முன்னடியான் சந்நதிக்கு எதிர்த்தாப்பிலே கீத்துக் காவணம் போட்டிருக்கே, அதை நல்லாப் பார்த்துகிட்டே நில்லு. எல்லாம் விளங்கும்!

பொன்னம்மாள்: ஓகோ! இப்பத்தான் எனக்கு எல்லாம் மட்டுப்படுது. அக்கா! தேரோட்டத் திருநாள் அன்னிக்குக் கூத்து நடக்குமே, அதைத்தானே சொல்லுறே?

பவளக்கொடி: ஆமா, தங்கச்சி! ராஜபார்ட் மாணிக்கம் அண்ணன் வேஷம் போட்டு நாடகம் ஆடினது இன்னமும் என் கண்ணுக்குள்ளேயே நிக்குதே! ம்...... பொன்னம்மா...வா, நடந்துகிட்டே பேசலாம். அடடே, மேய்ச்சலிலேருந்து மாடெல்லாம் திரும்புதே! நேரம் போனதே தெரியலையே.

பொன்னம்மாள்: எல்லாம் கனு கணக்கிலேதான் ஆயிட்டுது. மாணிக்கம் அண்ணுச்சி அக்கரைச் சீமைக்குப் போய் வருசமும் மூணு ஓடியிருச்சு: பாவம், அந்த ஆளைப் பத்தி அப்பாலே ஒரு தகவலும் காதிலே விழக்காணுமே, அக்கா?

பவளக்கொடி: ஏன் விழல்லே? இப்ப கேளு!...

[தெம்மாங்குப் பாடலின் மெல்லிய இசை காற்றில் மிதந்து வருகிறது.]

"ஆத்தோரம் கொடிக்காலாம்!...
அரும்பரும்பா வெத்திலையாம்..."

பொன்னம்மாள்: இம்பிட்டு அந்தமாய் சந்தம் சேர்த்துப் பாட மாணிக்கம் அண்ணுச்சி ஒண்டியாலேதான் முடியும். ஆனு, குரலைக் கேட்டால் ஆண் குரலாத் தோணலியே, அக்கா?

பவளக்கொடி: பொன்னம்மா! இப்படியே கொஞ்சப் பொழுது நின்னு காத்து வீசறபக்கம் திரும்பு. ம்...இப்போ உன்னிப்பாகக் கேளு, பார்க்கலாம்!

[தெம்மாங்குப் பாட்டு இப்போது தெளிவாகக் கேட்கிறது.]

"ஆத்தோரம் கொடிக்காலாம்
அரும்பரும்பா வெத்திலையாம்

போட்டாச் செவந்திடுச்சே,
ஆசை அத்தானே!
பூரிச்சுப் போவீங்களா, நேச மச்சானே"

பொன்னம்மாள்: பலே!...தெங்மாங்குத் தெய்வானை தான் பாடுது: பாட்டுச் சொல்லிக் கொடுத்த அதும் மச்சானைக் கண்ணுப் பக்கம் காண முடியவில்லை. ஆனா, தெய்வானை பழைய பாட்டை மறந்திடாம தன்னை மறந்து பாடிக்கிட்டுப் போகுது. அதைக் கூப்பிடட்டுமா, அக்கா?

பவளக்கொடி; ஊஹூம்! தலைச்சுமையோட அவசரமாப் போகுது போலே, கூப்பிடாதே!

பொன்னம்மாள்: சரி அக்கா! ம்... நடப்போமா?

பவளக்கொடி: (மௌனம்)

பொன்னம்மாள்: (கைகளை மெல்லத் தட்டி) ஏ, அக்கா! எந்த லோகத்திலே இருக்கே?

பவளக்கொடி: ம்!...கொஞ்ச நாழிகைக்கு முந்தி நாம் கண்ட அந்தப் பிரிஞ்சு போன பழைய நாடகக் கொட்டகை ஞாபகத்துக்கு வந்திச்சு. இப்போ இந்த தெய்வானைப் பொண்ணு கண்ணுக்கு முன்னுடி தோணிச்சு! மாணிக்கமும் தெய்வானையும் கொண்ட காதல் நாடகம் மனசிலே ஓடிச்சு; ஊர் உலகம் எதுவும் இல்லே எனக்கு!

பொன்னம்மாள்: ...அந்தப் பொண்ணு கண்ட கனவு தான் பலிக்காமப் போச்சு; இப்ப ஏதோ பழைய கனவை நினைச்சுப் பார்த்துப் பாடற பாட்டிலேயாச்சும் அதுக்கு மனசு ஆறுதல் கிடைக்கத்தான் வேணும்.

பவளக்கொடி: கண்கொண்டு பார்க்க ஏலாத தெய்வானையோட அழகெல்லாம் அவ அத்தான் மாணிக்கத்

தோடேயே கப்பல் ஏறிச்சோ, என்னமோ? அவங்க ரெண்டு பேரும் போட்ட திட்டப்படி எல்லாம் முடிஞ்சிருந்தா, இந்நேரம் தெய்வானை நொடிக்கு நூறு தெம்மாங்கு பாடுமே? அதோடே ஆசை மச்சானைக் கேலி செஞ்சு பாடுற பாட்டேதான் இது!...காலம் மாறுது; ஆனா, கனவும் அது கணக்கிலேயே மாறிடும் போலே!

பொன்னம்மாள்: அக்கா, கோட்டையிலே பிறந்தாலும் போட்ட சுழி தப்பியா போகும்? அதுக்கு முடிச்சுப் போடற அதிர்ஷ்டம் கண்டிக் கங்காணி பேரன் கந்தசாமிக்கு இருந்திருக்கிறபோது, மாணிக்கம் அண்ணாச்சியோட எண்ணப்படி எப்படி நடக்கும்?

பவளக்கொடி: ம்!...சரி காலை எட்டிவை, தங்கச்சி! அந்தி சாஞ்சு வருது குளிச்சு முழுகி ராத்திரிக்குக் கோயிலுக்குப் போகணும்!

## காட்சி 28

['கண கண'வென்னும் ஒலியுடன் காளைகளைத் தெரு வாசலுக்குக் கொண்டு வருகிறாள் தெய்வானை]

தெய்வானை: (உரிமையுடன்) காளைகளுக்குத் தண்ணீர் காட்டி ஓட்டியாந்திருக்கேன். நீங்க வாங்க மச்சான். வெயில் சூடேறிக்கிட்டு வருது.

கந்தசாமி: ஒரு வாய்க்கு வெத்திலைச் சருகு போட்டுக்கிட்டு வந்திடறேன், தெய்வானை.

தெய்வானை: பைய வாங்க. அவசரத்திலே கைச் சுண்ணும்பு உங்க வாய்க்குள்ளே போயிடப்போகுது. அப்பாலே,வெண்ணை தேடப்போக என்ஞலே முடியாது.

கந்தசாமி: ஒரு தடவை பட்டாத் தெரியாதா, தெய் வானைப் பொண்ணு! (ஏப்பம் விடுகிருன்.)

தெய்: (சிரிப்புடன்) பழைய சாப்பாடு வாய்க்கு ருசியாக இருந்துச்சுதுங்களா?

கந்தசாமி: இல்லாமலா ஏப்பம் எட்டுருக்கு எட்டுருப் பலே இம்மா அமர்க்களமாப் பொறியும்! கஞ்சிக் கலய மும் உன்னேடே கெண்டை மீன் கண்களும் இல் லேன்ஞ, ஏது பொண்ணு சந்தோஷம்?

தெய்: பார்த்தீங்களா?...என்னை நைத்தியம் பண்ணு றீங்களே? சரி, விளக்கு வச்சதும் செவ்வாய்ச் சந்தையி லேருந்து திரும்பிடுவீங்களா?

கந்தசாமி: ஓ!......வாரபோது மருக்கொழுந்து சரம் வாங்கியாரேன். அப்புறம்...ஆமா......உனக்குத் திங்கிற துக்கு இனிப்புப் பலகாரம் எது வேணும், சொல்லு!

தெய்: பூ கொஞ்சம் நிரம்பவே வாங்கி வாங்க... எனக்கு வேணும்; காளி அம்மனுக்கு சாத்தவேணும். வந்து..பலகாரம் எனக்கு இப்பத் தேவையில்லை...இன் னும் கொஞ்ச நாள் போனதும்......

கந்தசாமி: அதுதான் புரிஞ்சிக்கிட்டேனே, நேத் திக்கே!...என் குழந்தைக்கு வாங்கித் தரமாட்டேஞ? இப்போ :உனக்குத்தான் அவசியம் பட்சணம் வாங்கிக் கொடுக்கணும்.

தெய்: (சிரிக்கிருள்) ஹ......ஹ ஹா!

**கந்தசாமி:** தெய்வானை, நான் போய் வரட்டுமா?

**தெய்:** நல்லது, மச்சான், கத்திரிக்காய் மூட்டை, முருங்கக்காய் கட்டு, வாழைக்காய் தார் எல்லாம் கணக்குப் பார்த்துகிட்டீங்களா?

**கந்தசாமி:** ஓ!...

**தெய்:** பத்திரமா போயிட்டு வாங்க, மச்சான்!

**கந்தசாமி:** நீ பத்திரமாக வீட்டைப் பார்த்துக்க தெய்வானை! களத்து மேட்டிலேயிருந்து போரடிச்ச நெல்லு மூட்டை வரும். உள்ளே ஒரு ஓரமாக அடுக்கச் சொல்லு. மாங்குடிக் கோனாரு கைமாத்துப் பணம் முப்பது 'கொண்டாந்து தருவாரு. அதையும் வாங்கி கள்ளிப்பெட்டியிலே வச்சுக்க. போனதும் வந்ததுமாத் திரும்பிடறேன்!

[கூட்டு வண்டி புறப்படுகிறது]

## காட்சி 28

[நாடக விளம்பர வண்டி தெரு வழியாகப் போய்க் கொண்டிருக்கிறது. 'ட்ரம்' சப்தம் கேட்கிறது—கடைசியில் கீழ்க்கண்ட வாசகம் ஒலிபரப்பப்படுகிறது.]

"பூவத்தகுடி காளி அம்மன் கோயில் தேரோட்டத் திருநாளன்று இரவு ராஜபார்ட் மாணிக்கம் நடிக்கும் 'கோவலன்—கண்ணகி சரித்திரம்' நாடகம் நடைபெறும். இம்முறை தப்பினால் மறுமுறை வாய்ப்பரிது. ஒரே ஒரு ஸ்பெஷல் நாடகம்!"

## காட்சி 29

வேலாயி : தெய்வானை .....தெய்வானை...!

தெய்வானை: யாரது?

வேலாயி : நான்தான்......வேலாயி! மேலவளவுக் கிணத்துக்குத் தண்ணி மொள்ளப் போகிறேன். நீயும் வர்றியா?

தெய்: நான் வரலை, வேலாயி!

வேலாயி: ஏன்னு எனக்கு புரியும் தெய்வானை அந்தப் பக்கம் போனா, உன்னோடே மாணிக்கம் மச்சான் கண்ணிலே பட்டுட்டா என்ன செய்றதுன்னு பயம்... இல்லையா?

தெய்: உஸ்......சத்தமாப் பேசாதே, வேலாயி என் வீட்டுக்காரரு குளியலுக்குப் போயிருக்காரு, திரும்பிடு வாரு. ஆமா, நீ 'அவங்க'ளைக் கண்டியா?

வேலாயி : கண்டேனே!...நீ...?

தெய்: ஊஹூம்! நான் பார்க்கலே; எப்படி முடியும்? அவங்க வந்ததே ரொம்ப அதிசயமான சேதி. அந்த மச்சான் கூத்து வேறே ஆடப் போகுதாமே?

வேலாயி: நீ நாடகத்துக்கு வரமாட்டே?

தெய்: நான் கூத்துக்கு வந்தா அப்பவே என் தலை என் வீட்டுக்காரரோட கருக்கரிவாளுக்குப் பலியாக வேண்டியதுதான்.

வேலாயி: (பெருமூச்சு) ம்...

தெய்: ஆமா, மாணிக்.. ஹி ஹி...அந்த மச்சான் உடம்புக்கு ஒண்ணும் இல்லையே? ம்...இந்தாலே பாரு வேலாயி! ..அந்த மச்சான் நேசமாத் தந்ததே அந்த மோதரம் பெரிய சுமை மாதிரி சுமக்குது, என்னமோ தப்பு செஞ்சிட்ட கணக்கிலே!...இது என் நெஞ்சிலே நெருஞ்சி முள்ளாக் குத்துது! இதை உடைமைக்காரங்க கிட்டேயே நீட்டிப்பிடு, வேலாயி! இந்தா...மோதிரம்!

வேலாயி: ம்...அப்படியே செய்கிறேன். தெய்வானை! அதோ, உன் புருஷனும் வந்திட்டாங்க! நல்ல நேரம். பிழைச்சிட்டோம்!

[அப்போது கந்தசாமி உள்ளே நுழைகிருன்.]

கந்தசாமி: (வந்துகொண்டே) யாரு, வேலாயி தங்கச்சியா? அத்திப்பூ பூத்த மாதிரி இருக்கே! ஆமா, அந்த மாணிக்கம் பயல் ரொம்பப் பசையா வந்திருக்காளுமே? ஐயாவோட ரோசம் மூணு வருசத்தோடேயே காலாவதி ஆகிப் போயிடுச்சாமா?

வேலாயி: என்னமோ தெரியலீங்களே அண்ணுச்சி! நான் போயிட்டு வாரேன், தெய்வானை!

(மெட்டி ஒலிக்கச் செல்கிருள்)

கந்தசாமி: தெய்வானைப் புள்ளே, என்ன மூஞ்சி ஒரு மாதிரி இருக்கு?

தெய்: எப்பவும் போலத்தானுங்களே இருக்கு... போரிலேயிருந்து வைக்கோலைப் பிரிச்சுப் போட்டேன். தூசி ஏதாச்சும் பட்டுக் கிடக்கும், அம்பிட்டுத்தான்!

கந்தசாமி: இந்தப்பாரு என்னே!

தெய்: இதென்னுங்க, மாம்பிஞ்சு!

கந்தசாமி: உனக்குப் பிடிக்கும்னு கீழத்தெரு ஆயா சொன்னுங்க. குளிச்சிட்டு வாரப்ப திருப்பத்திலே மாமரம் இருந்துச்சு, பறிச்சிட்டு வ —ன். இந்தா...!

[அவன் அவள் கைதொட்டுக் கொடுக்கிருன்.]

தெய்: பட்டப்பகலிலே நீங்க ஒண்ணு...கையை விடுங்க? மாம்பிஞ்சைக் கொடுங்க!

[இருவரும் சிரிக்கிருர்கள்.]

## காட்சி 30

[அந்தி. கொல்லைப் புறத்திலுள்ள காய்கறிகளை வெள்ளாடுகள் தின்பதைக் கண்ட தெய்வானை அவற்றை விரட்டுகிருள்]

தெய்வானை:—ட்ரியோ......பொழுது பட்டுப் போச்சு; வெள்ளாட்டுப் பண்ணை முழுதும் இங்கேயே சுத்துதே! ஆட்டுக்குச் சொந்தக்காரங்க தேடவா போருங்க?... ஊரார் சோத்திலே உடம்பை வளர்க்கிற சில மனுசங்க மாதிரி இந்த வாயில்லாப் பிராணிகளும் இருக்கு; ஐயோ, பூத்திருந்த கத்தரிச் செடியைக்கூட ஆடு தின்னுட்டுதே. ஆடு புகுந்த இடமும் அமீஞ நுழைந்த வீடும் சர்வ

நாசம்னு அப்பா அந்தக் காலத்திலே படிச்சுப் படிச்சுச் சொல்வாங்களே! ட்ரியோ! ம்...ஓடித் தொலையுங்க.

[அப்பொழுது மாணிக்கம் சன்னக் குரலெடுத்துப் பாடுகிறான்.]

" ஆத்தோரம் கொடிக்காலாம்...
அரும்பரும்பா வெத்திலையாம்!"

தெய்வானை: யார் பாடுறாங்க? அக்கரைச் சீமைக்குப் போயிட்டு வந்திருக்கிற அத்தை மகன் குரலாட்டமே அச்சாயிருக்குதே?

மாணிக்கம்: இந்த மாணிக்கத்தைத் தவிர அழகான இந்தத் தெம்மாங்கை இவ்வளவு அக்கறையோட பாடறதுக்கு இந்தச் சுத்து வட்டத்திலே வேறு யார் இருக்காங்க?...நாம ரெண்டு பேரும் திக்குக்குத் திக்கு பிரிஞ்சிட்டாலும், நம்மோட பரிசுத்தமான அன்புக்கு அடையாளமா இந்தத் தெம்மாங்குப் பாட்டு எப்பவும் காத்தில் சுத்திக்கிட்டே இருக்கும், தெய்வானை!

தெய்: ம்!

மாணி: உன் வீட்டுக்காரர் கந்தசாமி புதுக்கோட்டைச் சந்தைக்கு மாடு வாங்க போயிருக்காராமே; திரும்ப நாளைக் கழிச்சுத்தானே வருவாரு?

தெய்: ஆமாங்க, மச்சான்!

மாணி: நான் வந்து அஞ்சு நாளாச்சு. ஒரு வாட்டியாச்சும் உன்னை நேருக்கு நேராக் கண்டு பேசணும்னு மனது துடிச்சுது. இப்பத்தான் முடிஞ்சுது! தெய்வானை, உன் முகம் ஏன் அதுக்குள்ளே மாறிடுச்சு?

தெய்: உங்க உடம்பு படுமோசமா இளைச்சிருக்குதே மச்சான்?

மாணி: மனசு இளைச்சா, மேனியும் இளைக்க வேண்டியதுதானே; ம்...அது சரி, உன்னை ஒரு கேள்வி கேப்பேன், கோவிச்சுக்க மாட்டியே?

தெய்: நீங்க கேட்கப் போற கேள்வி எனக்குத் தெரியும்! வேலாயி மூலமா உங்ககிட்டச் சேர்ப்பிச்ச மோதிரத்தைப் பத்தித்தானே?

மாணி: ஆமா, தெய்வானை. ஆத்தோரத்திலேயும் கழனி வெளியிலேயும் நாம ரெண்டு பேரும் ஜோடி சேர்ந்து வளர்த்த அன்புக்கு அடையாளமா இந்த மோதிரமாவது உன் வசம் இருக்கப்படாதா? என் மோதிரம் உன்னிடம் இருந்தா அதிலே என்ன தப்பு கண்டுபிடிக்க முடியும் ஊரும் உலகமும்?

தெய்: இந்த உண்மை என் புருசனுக்குத் தெரிஞ்சுதின்னு பனங்கலையைச் சீவுறுப்பிலே எந்தலையைச் சீவிப்பிடுவாங்க!

மாணி: என் மோதிரம் இல்லேன்னு சொல்லிட்டா போச்சு. இதை உன் கையிலே எப்பவும் போட்டுக்கக் கூட வேணும்...பேழையடியிலே போட்டுவை, நம்ம அன்பு மாதிரி அதுவும் அடங்கிக் கிடக்கட்டும். (தழு தழுத்த குரலில்) இந்தா தெய்வானை, மோதிரம்! (மோதிரத்தை எடுத்து நீட்டுகிறான் மாணிக்கம்)

தெய்: நல்லதுங்க .....உங்க மனசுப்படியே ஆகட்டும்! இப்ப நான் உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா?

மாணி: அந்தக் காலத்திலே நீ மூச்சுவ் டாமக் கேட்கிற கேள்விக்கெல்லாம் நானும் மூச்சுப் பறியாமப் பதில் சொன்னதில்லையா? கேளு, தெய்வானை!

தெய்: நீங்க கோவிந்தம்மாவைக் கண்ணாலம் செஞ்சிக்கிடப் போறீங்களாமே! எனக்கு ரொம்பவும் நிம்மதியாயிருந்துச்சு!

மாணி: நான் கல்யாணம் கட்டிக்கப் போறேனா? யார் சொன்ன கதை இது? பொண்ணு வீட்டிலேயிருந்து ஆள் வந்தாங்க; ஆனா நான் இன்னமும் முடிவு ஒண்ணும் சொல்லி அனுப்பலையே தெய்வானை!

தெய்: சொல்லியனுப்பறதை நல்ல சேதியாச் சுருக்க அனுப்பி வைங்க.

மாணி: உன் பேச்சு புதுசாத் தோணுதே, தெய்வானை?

தெய்: நல்ல வேளை, புதிராத் தோணுதின்னு சொல்லாம இருந்தீங்களே!

மாணி: என் மனசிலே ஒரே ஒரு உருவத்தைத்தான் நான் நித்தம் பார்க்கிறேன்; அது ஒண்ணுதான் எனக்கு இதமாயும் இருக்குது, அந்த உருவம் நீதான் என்கிறதை நான் சொல்ல வேண்டியதில்லை.

தெய்: உண்டாத் தீரும் பசி; ஆனா, கண்டாத் தீருமா? நம்ம விட்ட குறை தொட்ட குறை எப்படியோ அப்படித்தானே எதுவும் நடக்க முடியும்? நடந்ததைப் பத்தி அல்லும் பகலும் நினைச்சு உருகி என்ன பிரயோசனம்? மச்சான், என் பேரிலே உங்களுக்கு இருக்கிற கள்ளமில்லா அன்பு மெய்தானே?

மாணி: சந்தேகமென்ன?

தெய்: அப்படியானு, என் இஷ்டம் ஒண்ணு உண்டு, அதை நிறைவேத்துவீங்களா?

மாணி: காளி ஆத்தா ஆணையாச் செஞ்சு முடிக்றேன் தெய்வானை.

தெய்: மச்சான், நீங்களும் கோவிந்தம்மாளும் புருசன்-பெண்சாதியாக வேணும். உங்களுக்கும் ஆறுதல் உண்டாகும். புது வெள்ளம் ஓடிவரையிலே அதுக்கு எம்மிட்டுப் பூரிப்பு ஏற்படுது, அதுபோலவே எனக்கும் உண்டாதும்!

மாணி: உன் விருப்பம் அதுவானு, எனக்கு அட்டிசொல்ல தெம்பு இல்லே. தெய்வானை! பரிசம் போட்டு முடிஞ்சதும், போட்ட சம்பந்தம் முறிஞ்சு போனதும் இ ் ஊர்ப்பக்கத்துக்கு நம்ப ரெண்டு பேர் கதைதான் உதாரணம்! பணம் பத்தும் செய்யும் என்கிறது உங்க அப்பா விஷயத்திலே பலிச்சுப்போன சேதிதானே? ம்... பாவம், அவங்க கதையும் முடிஞ்சுது. வாழ்க்கை நினைச்சுப் பாத்தா அதிசயமான விளையாட்டு போலத்தான் தோணுது! தெய்வானை, கோவிச்சுக்கிடாதே. என்னமோ நினைச்சேன்; என்னமோ பேசறேன்! இந்தா... இந்தச் சாமான்களை எடுத்துக்கிட்டுப்போ, தெய்வானை!

தெய்: கண்டாங்கிச்சேலை, வெல்வெட்டு ரவிக்கைத் துண்டு, வெள்ளிக் கிலுகிலுப்பை... பழம்...? ம்! அவரு வந்து பார்த்தா ஒண்ணு கிடக்க ஒண்ணு பேசுவாரு! தப்பா நினைச்சுக்காம நீங்க எடுத்துப் போயிடுங்க.

மாணி: இப்படி நீ மறுப்பு பேசுவேன்னு நான் சொப்பனத்திலேகூட காணலை, தெய்வானை. உன்னைக் கட்டிக்கிட்டதிலே எனக்கும் கந்த சாமிக்கும் இடையிலே

போட்டியும் பொருமையும் பூசலும் ஏற்பட்டுப் போச்சு; இனி கந்தசாமி ஆத்திரப்படுறதுக்கு என்ன இருக்குது? தெய்வானை, நம்ப கனவுதான் பலிக்கலே! நம்ப பிள்ளைங்களாவது நம்ப ஆசைகளை நிறைவேத்த வேணுமா? நானே கந்தசாமிகிட்டே வந்து சொல்றேன். நீ எல்லாத்தையும் எடுத்துக்க; அவர் எதுவும் குற்றம் சாட்ட மாட்டாரு.

தெய்: என் வீட்டுக்காரரை இன்னும் நீங்க முழுசாப் புரிஞ்சிக்கலே, மச்சான். உங்க மனசு கோணும மோதிரத்தையும் போட்டுக்கிட்டேன்; அது கணக்கிலே, சாமான் சட்டையும் எடுத்துக்கிறேன்! ஆனா அவங்க காதுக்கு மட்டும் இந்தத் தாக்கலைப் போட்டிடாதீங்க!

மாணி: ஆகட்டும், தெய்வானை. மனசிலே கை வச்சுச் சொல்லுவேன்; இப்பத்தான் என் நெஞ்சு அமரிக்கையாயிருக்குது! சரி, நான் போய் வாரேன்!...நாடகத்துக்குக் கட்டாயம் வந்திடு! போயிட்டு வாரேன், தெய்வானை!

[மாணிக்கம் சீட்டி அடித்தவண்ணம் போகிறன்.]

## காட்சி 31

[கந்தசாமி துண்டை உதறி வீசியபடி வருகிறான்]

கந்தசாமி: தெய்வானை!...ஏய் தெய்வானை!

தெய்வானை: இந்தா வந்திட்டேனுங்க. வயக் காட்டுக்குப் புறப்பட்டீங்களே புது மாடு முரண்டு பிடிக்குதுங்களா? 'புளிய மிலாறு' கொண்டாரட்டுமா, மச்சான்?

கந்தசாமி: (கேலியாக) கொண்டா, புள்ளே! பழைய செவலைப் பசுதான் புதுசாத் திமிற ஆரம்பிச்சிருக்கு!

தெய்: இந்தாங்க மச்சான்.

கந்தசாமி: (புளியங்குச்சியை ஒரு வீச்சு வீசுகிறான்) ம்...பார்க்கிறேன் வேடிக்கையை.

தெய்: மச்சான், வாய் பேசத் தெரியாத பசுவையா அடிக்கப் போறீங்க? நான் சும்மா விளையாட்டுக்கில்லே கொண்டாந்தேன்.

கந்தசாமி: (எரிச்சலாக) ஆமா, உன் நடப்பு எல்லாமே வேடிக்கையும் விளையாட்டுமாகத்தான் இருக்குது.

தெய்: (வேதனையுடன்) மச்சான், உங்க பேச்சு குத்தலாயிருக்கே?

கந்தசாமி: முந்தாநாள் அந்தப் பயல் மாணிக்கம் வேஷம் போட்டு கூத்தடிச்ச நாடகத்துக்கு யாரைக் கேட்டுக்கிட்டு நீ போனாய்? அது மட்டும் குத்தலாகத் தோணலையாங் காட்டியும்?

தெய்: கோயிலுக்குச் சாமி கும்பிடப் போனேன். கூடமாட வந்த நம்ம பொன்னம்மாவும் பவளக்கொடியும் கூத்துப் பார்க்கணும்னு ஆசைப்பட்டாங்க...... இதிலே தப்பு எதுவும் இல்லேன்னு யோசிச்சு முடிவு செஞ்சுகிட்டு நாடகம் பார்த்தேன். (செருமுகிருள்)

கந்தசாமி: உன் கட்சிப் பிரகாரம் நீ செஞ்சது தப்பில்லேன்ஞ, இப்போ நான் உன்னை அடிக்கப் போறதும் குற்றமில்லே.

[புளியங்குச்சியை ஓங்கி வீசுகிருன். அது சமயம் மாணிக்கம் வந்து நிற்கிருன். அடி அவன் மீது விழுகிறது]

கந்தசாமி: ஆ, நீயா?—இத்தனை காலம் நீ ஆடின நாடகம் பூராவும் தோத்துப் போனதுகூட எனக்கு மறந்திட்டுதா? உனக்கு இங்கே என்ன சோலி? மாணிக்கம், ரொம்ப நல்லதனமாகச் சொல்றேன். நீ இப்பவே இங்கேயிருந்து நகண்டு போயிடு, ஆமா! இல்லேன்ஞ, இப்போ பட்ட ஒரு அடியோட தப்பாது!...ம்!

மாணி: செஞ்ச குத்தத்தை சுட்டிக் காட்டிஞ அடியும் உதையும் பரிசு கிடைக்கிறது ஒண்ணும் அதிசயமில்லே, கந்தசாமி. எனக்கு ஒரு தங்கச்சி இருந்து, அது காரணமில்லாம அடிபடறதைக் கண்டா என் மனசு தாங்குமா? கொஞ்சம் எண்ணிப் பாருங்க! உங்க குடும்ப விவகாரத்தில் குறுக்கிடறதுக்கு எனக்கு உரிமையில்லே. ஆனுலும் என் மனசிலே பட்டதைச் சொல்லாமலும் இருக்க முடியாது. தெய்வானை மற்றவங்க மாதிரி நாடகம் பார்த்தது தப்பில்லே என்கிறதை மட்டும் நீங்க புரிஞ்சிக்கிடுங்க. குணம் நல்லபடியா இருந்தாத்தான் பணம் மதிப்பாயிருக்கும்!

[தெய்வானை செருமும் அரவம்.]

கந்தசாமி: மாணிக்கம், நீ வந்த வேலையைப் பார்த்துக் கிட்டுப் போகப் போறியா, இல்லையா? நீ எனக்கு வாத்தியாரா ஆகவேணும்.

மாணி: வந்த வேலையிலே ஒரு விஷயம் முடிஞ்சுது. என் கடமை அது! இனி இன்ணொண்ணு பாக்கி! அதோ உங்க திண்ணையிலே என்னோட கல்யாணப் பத்திரிகை வச்சிருக்கேன்! நீங்களும் தெய்வானையும் கட்டாயம் வந்திடுங்க. நம்ப பழைய பகையை இனியும் மனசுக்குள்ளேயே பூட்டி வைக்காதீங்க. நான் எதிர்பார்க்கிறதெல்லாம் உங்களோட அன்பை மாத்திரம்தான், கந்தசாமி! நான் வாரேன்!..போயிட்டு வாரேன், தெய்வானை!

[மாணிக்கம் போகிறான்.]

கந்தசாமி: ஏ, தெய்வானை, இன்னிக்கு ஒனக்கு முதல் தரமா மாப்பு விட்டுப்பிடுறேன். இன்னொரு சங்கதி. நீ அந்த மாணிக்கத்துக்கிட்டே பேசினாலோ அல்லது பேசினதாத் தகவல் கிடைச்சாலோ, அப்பாலே உன் உசிர் உன்கிட்டே இருக்காது; சேலைத் தலைப்பிலே முடிச்சுப் போட்டு வச்சிக்க!

[தெய்வானை மறுபடியும் விம்முகிறாள்.]

## காட்சி 32

[மாணிக்கம் தேய்பிறையைப் பார்த்த வண்ணம் துயரமே உருவாக நின்று கொண்டிருக்கிருன்.]

மாணிக்கம்: (தனிமொழி) தேஞ்சு போன பிறையாட்டந்தான் என்னுடை வாழ்க்கையும் செயல் கெட்டுப் போயிடுச்சு. ஆனு, அந்தத் தேய்பிறைக்காச்சும் நாளைக்கு விடிவு கிடைக்குமிங்கிற ஒரு தெம்பும் நம்பிக்கையும் இருக்கும். ஆமா, எனக்கு இனிமே வளர்பிறை ஏது? ...கண்ட சொப்பனமும், கொண்ட காதலும் இனி எனக்குப் புதுப்பாடம் சொல்லிக் கொடுக்க ஏலாது! ஏலவே ஏலாது!

[கண்களைத் துடைத்துக் கொள்ளக்கூட உணர் விழந்து நிற்கிருன் மாணிக்கம். அப்போது தெய்வானை மெல்ல நுழைகிருள்; நுழைந்து, மாணிக்கத்தின் கண்ணீர்த் திவலைகளை எட்டி நின்று சேலை முன்ருனையினுல் துடைத்தெடுக்கிருள். மாணிக்கம் திகைப்படைந்து விழிக்கிருன்]

மாணி: தெய்வானை;.........தெய்வானை!......(விம்முகிருன்)

தெய்: மச்சான்! அந்தக் காலத்திலே நீங்க எனக்கு வரம் தந்தீங்க; ஆனு, அது காத்தோடு கலந்து கனவாகிப் போயிடுச்சு; இப்ப உங்ககிட்டே இன்னெரு வரம் கேட்டு வாங்கிட்டுப் போக வந்திருக்கேன். உங்க வாழ்க்கையிலே முழுசான நிலா உதிக்கச் செய்யணும்னு தான் நித்தமும் கனு கண்டுக்கிட்டிருக்கேன். நீங்களும் நாலு பேரைப் போல குடியும் குடித்தனமுமா சந்தோசத்

தோடே இருக்க வேணும். இந்த வரத்தை நீங்க ந்தாத் தான் நான் இங்கிட்டிருந்து நகருவேன்! சேர்ை குடி யிருப்புக் கோவிந்தம்மாவை நான் முடிச்சுவச்சிப்பி ற னுங்க, மச்சான்!...நீங்க சந்தோசமாயிருந்தாத் எனக்கும் ஆறுதலாயிருக்குங்க, மச்சான்!பரிசம் போட கண்ணாலப் பத்திரிகை அடிச்சு, ஊர் வெத்திலே பாக் வச்சு முடிஞ்சதுக்கு அட்பாலேயும் நீங்க இப்படி அடிக் கடி மனசு மாறி பேசப்புடாதுங்க!

ாணிக்கம் தெய்வானையை ஆழ்ந்து நோக்கு கிறான். அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டே இருக்கின்றது; போது அவளது விழிநீரை அவன் துடை விடுகிறான்.]

மாணி: நீ இருந்து என் கண்ணாலத்தை ந வைப்பியா?

தெய்: என்னோடை பரிசுத்தமான அன்பு உங்க கண்ணாலத்தை நடத்தி வைக்குங்க அத்தான்

மாணி: நடைப்பிணத்துக்கு உயிர் உண்டாக் பிறப்புக் கொடுத்து வேடிக்கை பார்க்க நீ நெனை கையிலே, உன் ஆசைக்கு ஒப்பாம இருக்க மு ம்! உன் இஷ்டப்படியே ஆகட்டும்!

[தெய்வானை கையெடுத்துக் கும்பிடுகிறாள்

தெய்: என் வீட்டுக்காரர் பயாஸ்கோப்பே திரும்பி வார பொழுது ஆயிட்டுது. நான் பே வாரேங்க, மச்சான்!

[தெய்வானை விடைபெறுகிறாள். மாணிக்க கண்ணைத் துடைத்துக் கொள்ளுகிறான்.]

## காட்சி 33

[சற்றுத் தொலைவினின்றும் நாதசுர இசை மிதந்து வந்து கொண்டிருக்கிறது.]

தெய்வானை: (தன்னுள் மெல்லிய குரலில்) காளி ஆத்தா, மாணிக்கம் மச்சானையும் கோவிந்தம்மாவையும் தீர்க்காயுசோட வைச்சுக் காப்பாத்து.

பவளக்கொடி: (கதவு தட்டி) தெய்வானை!

தெய்: பவளக்கொடி, வந்திட்டியா? என்ன ஆச்சு? கைக்குக் கிடைச்சுதா? கண்ணாலத்துக்கு மொய் நேரம் வந்திருச்சே? இம்மாம் நேரம் தாலி பூட்டி சிருக்குமே?

ளக்கொடி: எனக்குத் தெரிஞ்சவங்க எல்லாரும் ன்னு கையை விரிச்சிட்டாங்களே, சோதனையாட் இப்ப என்ன பண்றது, தெய்வானை!

தய்: பவளக்கொடி, எனக்கு மாணிக்கம் மச்சான் சலைத் துணிமணி எல்லாம் உன்கிட்டே கொடுத்து அப்படியே இருக்கட்டும். மச்சான் கொடுத்த மோதிரம் உன்கிட்டே இருக்கில்லே, அதை எங் அடகு வைச்சு பத்து ரூவா வாங்கிட்டு ஓடியா. தவிர அவசரத்துக்கு வேறே வழியில்லே. என் இருக்கிற இம்பிட்டுத் தங்கமும் எனக்கு ஆபத்துக் கொடுக்காது. மச்சான் ஆசையாவும் அன்பாக ாடுத்த மோதிரத்தை அடகு வைக்கிறதாக நினைச்

சாலே, ரத்த ஓட்டம் நின்னுபோயிடும் போலேருக்கு. எல்லாம் காளி ஆத்தா விளையாட்டு! ஓடு, பவளக்கொடி, ஓடு! மச்சான் மனசு ஒரு நிலையிலே இல்லே. நேத்துராவு மாடு வித்துப்புட்டுத் திரும்பையிலே யாரோ இவுக பணத்தைப் பறிச்சுக்கிட்டு ஓட முனைஞ்சப்ப, கடவுளாட்டம் ஒரு ஆளு வந்து காப்பாத்தித் தந்தாரும்!...ஆனதாலே, இவகளுக்கு மனசுக்கு நிம்மதியே இல்லே!...நீ போனதும் வந்ததுமா ஓடியா!...

பவளக்கொடி: சரி, நான் அப்படியே செய்றேன். ஆமா, உன் புருசன் எங்கே?

தெய்: அவங்க கொல்லையிலே இருப்பாங்க; தண்ணி இறைவே நடக்குது.

பவளக்கொடி: அப்படியானு, நீயே வந்து எழுதப் போறியா?

தெய்: ஆமா; இந்தச் சேதி அவங்க காதுக்கு டிடும். அன்னிக்கு மாதிரி உதையும் பேச்சும் கி கும்; எனக்கு ஒரு அண்ணன் இருந்து, அதுக்குக் ஞலம் நடந்தா, நானே போய் மொய் எழுதாம இ முடியுமா, பவளக்கொடி?

பவளக்கொடி: மெய்தான், தெய்வானை.

தெய்: ம், நீ ஓடு பவளக்கொடி.

[கதவு மறைவிலிருந்து வெளிப்பட்டு கிறான் கந்தசாமி.]

கந்த: (பதட்டத்துடன்) ஓடாதே, நில்லு கொடி!

தெய்: (கலவரத்துடன்) ஆ, நீங்களா?

கந்த: தெய்வானே, புதுப்புடவை மாத்திக்கிட்டு புறப்படு.

தெய்: (நடுக்கம்) எங்கே போகணுமுங்க?

கந்த: மாணிக்கம் கண்ணுலத்தைப் பார்க்கிறதுக்கு. நீங்க ரெண்டுபேரும் பேசிக்கிட்டிருந்தது அம்பிட்டையும் ஒண்டியிருந்து கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன்!

தெய்: ஐயோ, நான் செஞ்சது...

கந்த: நீ என்ன செஞ்சாய்? நல்லதைத்தான் நீ நினேச்சே, ம், புறப்படு. நீ போனதும்தான் அங்கே .ர்த்தம் நடக்கவேணும்.

.தய்: நீங்கதாஞ பேசுறீக! பேசறது மெய்தாஞ?

.ந்த: காளி ஆத்தா பேரிலே ஆணே இது. நான் புது மனிசஞகப் பேசுறேன். அத்தனேயும் நெச .தம். நீயும் நானும் வந்தால்தான் தாலி பூட்டுவேன்னு .க்கம் கொல்லேக்காட்டுக்கு வந்து என் கையைப் .க் கெஞ்சிஞன்; சின்னப் பிள்ளே போலக் கண்ணீர் .ன். ஜென்ம விரோதியாஞலும் அன்பு செலுத் . காந்தி மகாத்மா சொன்னது அவனுக்குத் தெரிஞ் .ந்து; எனக்குத்தான் புரியாமப்போச்சு... நடந்ததை .டுவோம்! இப்பத்தான் மாணிக்கத்தை நான் .சக்கிட முடிஞ்சுது! இன்ஞெரு ரகசியமும் உன் . போடணும்!

.ய்: (ஆவலாக) என்னங்க மச்சான்?

.ந்த: .நேத்திக்கு ராவிலே கீரமங்கலத்திலேருந்து பாரபே..., என் கிட்டேயிருந்த மாடுவித்த பணத்

தைக் களவாட வந்த திருடனை மடக்கிப்போட்டுத் துரத்தினது நம்ப மாணிக்கமேதானும்! மையிருட்டிலே கறுப்புத் துணி போட்டு மூஞ்சியை மூடியிருந்ததாலே எனக்கு ஆளைப் புரிஞ்சுக்க ஏலாமப் போச்சு!

தெய்: அன்பு எதையும் கேட்காதாம்! அது கொடுக்குமாம்! இப்படி அடிக்கடி அண்ணாச்சி சொல்றது உண்மைதான்!

கந்த: ம்...சரி, நீ புறப்படு. தெய்வானை நான் உள்ளே போய்ப் பணம் எடுத்தாரேன்...மொய் எழுத வேணுமில்லே!

தெய்: காளி ஆத்தா, நீதான் கண்கண்ட தெய்வம்.

## காட்சி 34

[நாதசுர இசையும் மேளச் சத்தமும் கேட்கின்றன. மாணிக்கத்தின் வீட்டில் புத்தாடைப் பொலிவு காட்ட தெய்வானையும் அவள் கணவன் கந்தசாமியும் அடியெடுத்து வைக்கின்றனர். சிறுமி அல்லி, நாகரீக இளைஞன் கோதண்டம் முதலானோர் காணப்படுகின்றனர். அப்போது, மணக்கோலத்தில் இருந்த கோவிந்தம்மா பதட்டத்துடன் தெய்வானையை நெருங்குகிருள்.]

**கோவிந்தம்மா:** தெய்வானை அக்கா! காளி ஆத்தா எந்தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டுபிட்டா. கண்ணாலத்துக்கு மணவறையிலே வந்து குந்த வேண்டிய புது மச்சான் காளி ஆத்தா சந்நதியிலே பித்துப் பிடிச்சாப்பிலே உட்கார்ந்துக்கிட்டிருக்குது. உன்னை மட்டும் தனியாகக் கண்டு பேசணுமாம்!..வரச் சொன்ஞங்களாம் ஓடு அக்கா, ஓடு!

[தெய்வானை ஓடுகிருள்]

## காட்சி 35

[காளி கோயிலில் சந்நிதியிலே மாணிக்கம் புத்தாடைகள் திகழ, மலர் மாலையுடன் அமர்ந்திருக்கிருன். தெய்வானை ஓடி வருகிருள்.]

**தெய்வானை:** மச்சான்! மச்சான்!

[மாணிக்கம் கண் கலங்குகிருன்]

மாணிக்கம்: தெய்வானை; என்னைப் பத்தின ஒரு பயங்கரமான ஒரு ரகசியத்தைச் சொல்லத்தான் உன்னைத் தனியாகக் கூப்பிட்டேன்.

தெய்: சொல்லுங்க, மச்சான்!

மாணி: தெய்வானை, அந்த நாளிலே நீ என் நெஞ்சிலேயும் விளையாடினே; விளையாட்டும் காட்டினே; உன்னை நான் எம் மனக் கோயிலிலே தெய்வமாக்கிக்கிட்டேன்; காளி ஆத்தாளுக்கும் இது பொறுக்கலே போலே. உன்னையும் என்னையும் காட்டுக்கும் மேட்டுக்குமாப் பிரிச்சுப் பிட்டது!.....ஆனா, இன்னிக்கும் நீதான் தெய்வமா மாறி என்னைக் காப்பாத்தணும்.

தெய்: உங்க பேச்சு ஒண்ணுமே மனசுக்கு மட்டுப் படலீங்களே?...

மாணி: தெய்வானை! கோடி வீட்டு சின்னமுத்து மாப்பிள்ளைக் கோலத்திலே இருக்கும்; அது கையிலே நம்ம கோவிந்தம்மாவை ஒப்படைச்சுப்பிடு.

தெய்: (பதட்டத்துடன்) நீங்க!......

மாணி; நான்..... நான் என்னை மறந்து எம்பிட்டோ நாளாயிடுச்சு; என்னை நானே திருத்திக்கிடலாம்னுதான் மெனக்கெட்டுப் பார்த்தேன்; முடியல்லே! ஆனதாலே தான் என் உடலை மட்டும் கோவிந்தம்மா கையிலே ஒப்படைச்சு, என்னைப்போல அதையும் நடைப்பிணமா ஆக்க விரும்பலே!...இன்னிக்கே அக்கரைச் சீமையை நாடி ஓடப் போடறேன் நான்...என்னோட துல்லியமான நெஞ்சிலேயும் பரிசுத்தமான நெனைப்பிலேயும் தோணிக் கிட்டே இருக்கப் போற அந்த அன்புத் தெய்வம்தான் இனி என்னை வாழ வைக்கப் போகுது; வாழ்த்தவும்

போகுது! இனிமே எனக்கு எப்பவும் சிரிப்பும் அமைதியும்தான் உண்டாகும்; நாள் முச்சூடும் கனு கண்டுகிட்டே பொழுதை ஓட்டிக்கிட்டிருப்பேன்!....அஞ்சு வயசிலே அறியாப் பருவத்திலே நான் என் தெய்வத்துக்கு கையடிச்சுக் கொடுத்த சத்தியததைக் கட்டாயம் காப்பாத்திப்புடுவேன்!... இந்த ஒரு ஆறுதல்தான் எனக்கு உயிர், உலகம் அல்லாம்!...ஆமா, தெய்வானை! இது மெய்யாலுமே சத்திய வாக்காக்கும்! ஏன்னு, நீதானே எனக்குச் சத்தியமும் சாமியும்!...

[தெய்வானை விம்முகிருள்.]

தெய்: மச்சான்!

மாணி: அழப்பிடாது, அத்தை மகளே!...முகூர்த்த வேளைக்குள்ளே கோவிந்தப் மா...சின்னமுத்து கண்ணலத்தை முடிச்சு வச்சுப்பிடு! தெவ்வானை!...நீ எப்பவும் பாடுவியே தெம்மாங்குப் பாட்டு, அதைக் கடைசி வாட்டியா ஒரு தக்கம் பாடுவியா?...

[தெய்வானை விக்கலுக்கும் விம்மலுக்கும் இடையில் 'ஆத்தோரம் கொடிக்காலாம்!' என்ற தென்பாங்குப் பாடலைப் பாடுகிருள்.—பாட்டு முடிந்ததும், மாணிக்கத்தின் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு பிரிகிருள்.]

—முற்றிற்று—

(திரை)

தொல்காப்பியர் நூலகம்

JACKET PRINTED AT PREMA ART PRINTERS, MADRAS-24